# The Bible Standard

(Extra - Edition)



"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from the Booklet**

**பொருளடக்கம்**

## ஆவி மார்க்கம் என்பது பிசாசின் மார்க்கமே

**SPIRITISM IS DEMONISM**

**Tamil Version - 6**

# ஆவி மார்க்கம் என்பது பிசாசின் மார்க்கமே

## SPIRITISM IS DEMONISM

*"தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்." – யூதா 6.*

ஆகாய மண்டலத்தில் பொல்லாத ஆவிகள் குடி கொண்டிருக்கின்றன என்ற வேத போதனையை தற்காலத்தில் அநேக ஜனங்கள் சாதாரணமாய் நம்புகிறதில்லை. இந்த அவநம்பிக்கையின் பலனாக ஆயிரக்கணக்கான நல்லெண்ண முள்ள ஜனங்களும் இப்பொல்லாத ஆவிகளின் கண்ணிகளில் வெகு சுலபமாய் அகப்பட்டுக் கொள்கிறார்கள். எனவே சடத்துவ, மானத, சன்மார்க்க, தேவபக்திக்கடுத்த விஷயங்களில் கேடு ஏற்படுகிறது. இந்த ஆவிகளின் வழக்கமான செயல்முறை முதலில் வேடிக்கையையும் விநோதத்தையும் எழுப்பி விடுவதேயாகும். இது என்ன விநோதமாய் இருக்கிறது என்னும் எண்ணத்தை எழுப்பிவிட்டு, அவைகளின் செய்கைகள் மேல் ஜனங்கள் நோக்கங்கொள்ளும்படி ஏவுவதே அவைகளின் வழக்கமான செய்கையாயிருக்கிறது. அவைகளைப் பற்றி அறிய வேண்டுமென்னும் நாட்டம் அதிகப்பட அதிகப்பட, ஆராய்ச்சி செய்கிறவன் "ஹிப்னாட்டிசம்" போன்ற ஒருவித வசியத்துக்குட் பட்டு அவைகளைப்பற்றி அதிகம் அதிகமாய் ஆராய்ச்சி செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறான். (அறிய வேண்டுமென்னும் ஆசைக்கு உட்படுகிறான்.)

சில வேளைகளில் ஆவிகள் கிரியைகள் நடப்பிக்கும் இடங்களில் நடைபெறும் விநோதங்களைக் கண்களால் பார்த்து, காதுகளால் கேட்டு, ஸ்பரிச உணர்ச்சியால் அறிந்து, அந்த ஆவிகளோடு உறவாடுகிறவன் அவைகளின்மேல் வாஞ்சை கொள்ளுகிறான். சில வேளைகளில் ஆவிகள் மேஜை முதலிய சாமான்களைத் தட்டுவதின் மூலமாய் அவைகளிடமிருந்து செய்திகள் கிடைக்கின்றன. இன்னும் சில சமயங்களில் பரவசமடைந்து தரிசனம் காண்கிறதின் மூலமாய் செய்திகள் வருகின்றன. இவ்விதமாக, மனுஷரோடு ஆவிகள் உறவாடுகிற ஒவ்வொரு சமயத்திலும் அவர்களுக்குக் கிடைக்கும் செய்திகள் உண்மையாகவே பிசாசுகளிடமிருந்து வருகிறவைகளாய் இருக்க, அவைகள் மரித்துப்போன மனிதரிடமிருந்து வருகிறவை களாகக் கருதப்படுகின்றன. இந்த எண்ணமே அநேகருக்கு ஆவிகளோடு உறவாடுவதற்கு விசேஷித்த உற்சாகத்தையும் பிரியத்தையும் மூட்டிவிடுகின்றன. மரித்துப் போனவர்கள் அவர்களைத் தேடி வந்துவிட்டதாகவும் அவர்களோடு சம்பாஷித்து உறவாடுவதற்கு அவர்கள் திராணியுடையவர்களாய் இருப்ப தாகவும் எண்ணங்கொண்டு, அவர்கள் அவை மூலமாகப் பெரிய கனமடைந்து விட்டதாக எண்ணுகிறார்கள். மரணத்திற்குப் பிற்பாடுள்ள விஷயத்தைக் குறித்துக் கேள்விப்பட (அறிய) அவர்கள் பிரியங்கொள்ளுகிறார்கள். நல்லவர்களாய் மரித்தவர்கள் வெகுதூரத்தில் பரலோகத்திலிருக்கிறார்களென்றும், பொல்லாதவர்களாய் மரித்தவர்கள் வெகு தூரத்தில் நரகத்தில் வேதனையடைந்து கொண்டிருக்கிறார்களென்றும் சிறு வயது முதற்கொண்டே தவறாக படித்திருக்கிறதையும் மறந்து விடுகிறார்கள். இவ்வாறு தவறாக படித்திருப்பதும் முற்றிலும் மறந்துவிடப்படுகிறதென்பது, கொஞ்சக் காலத்திற்கு முன் ஒரு கத்தோலிக்கப் பெண்மணியிடமிருந்து கிடைத்த ஒரு கடிதத்தினால் அறியப்படுகிறது. மற்றவர்கள் கேட்கவும் பார்க்கவும் கூடாதவைகளைத் தான் கேட்கவும் பார்க்கவும் கூடியதான ஒரு வரத்தை (சக்தியை –Clairvoyant powers) அவள் முதலில் எப்படிப் பெற்றுக்கொண்டாளென்பதை அக்கடிதத்தில் தெரிவிக்கிறாள். இது முறையே விழுந்துபோன தேவ தூதர்களாகிய பொல்லாத ஆவிகளோடு அவள் உறவாடுவதற்கு இடமுண்டாக்கிவிட்டது. தாங்கள் உத்தரிப்பு ஸ்தலமாகிய பாவ விமோசன ஸ்தலத்தில் உள்ளவர்களென்றும், அவளுடைய உதவியை நாடி வந்ததாகவும், அவைகள் அவளிடம் பாவனை பண்ணின. தங்களுக்காக அவள் ஜெபம் பண்ணும்படி அவைகள் அவளை வருந்திக்கேட்டு அவளை அதிகமதிகமாய் தங்களுடைய ஆதிக்கத்துக்குட்படுத்திக் கொண்டிருந்தன. ஆனால் இவ்விஷயத்தைப் பற்றி, சில சத்திய உபதேசங் அளடங்கிய பிரசுரங்களை வாசித்ததின் பலனாக, இந்த பெண்மணி அந்த ஆவிகளின் கையினின்று சரியான தருணத்தில் விடுவிக்கப்பட்டாள். அது முதற்கொண்டு, விழுந்து போன தூதர்களாகிய இந்த ஆவிகளோடு (ஆவி ஜீவிகளோடு) எவ்விதமான அன்னியோன்னியமும் உறவும் அவள் வைத்துக்கொள்ளாமல் அடிக்கடி ஜெபம் பண்ண அப்பியாசித்துத் தனது மனதைச் சீர்ப்படுத்திக் கொண்டாள். வேத புத்தகம் போதிக்கிற சத்தியத்தில் அவள் படிப்படியாய்ப் பிரகாசமடைந்து வந்தாள்.

### பிசாசுகள் கையாளும் வஞ்சக முறைகள்

இந்த ஆவிகள் தங்களை நமது பரம பிதாவாகிய யேகோவா என்றும், கிறிஸ்து என்றும் காட்டி, அடிக்கடி ஜெபம் பண்ணவும், பாவத்தை வெறுக்கவும், வேத புத்தகத்தை அடிக்கடி வாசிக்கவும், இன்னும் இவைபோன்ற வேறு அநேக பக்திக்கடுத்த காரியங்களைச் செய்யவும் ஏவுகின்றன. இப்படிச் செய்வதற்குக் காரணம், தங்களுடைய ஆட்களாக வசப்படுத்திக் கொள்ளப் படுகிறவர்களுடைய மனச் சித்தத்தைத் தளர்ச்சியடையும்படி செய்து, அவர்களைத் தங்களுடைய சிநேகிதர்களாக்கிக் கொள்ள வேண்டுமென்னும் நோக்கமேயாகுமென்று தோன்றுகிறது. கொஞ்சக் காலத்திற்குப் பிறகு முன் செய்தவைகளுக்கு மாறான இழிவும் அவமானமுமான காரியங்களைச் செய்ய ஏவப்படுகிறார்கள். வேத புத்தகம் தூஷிக்கப்படுகிறது; ஜெபம் செய்வது பரிகாசம் பண்ணப்படுகிறது; இவை போன்ற வேறு அநேக காரியங்களையும் அவைகள் நடைபெறச் செய்கின்றன. அச்சமயத்தில் அந்த ஆவிகளின் வசியத்திற்குட்பட்டவர்கள் யாராவது கலக்கமடைந்து, அவைகளின் கையினின்று நீங்கவேண்டுமென்று முயற்சி செய்தால், அந்த பொல்லாத

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

ஆவிகள் அவனைப் பரிகாசம் பண்ணி, இன்னும் கொஞ்சக் காலத்தில் அவன் தங்களுடைய முழு அதிகாரத்திற்குட் படுத்தப்பட்டு சதாகாலமும் சித்திரவதை செய்யப்படுவானென்றும் சிலவேளைகளில் சொல்லிப் பயமுறுத்தி அவனோடு சபதம் பண்ணுகின்றன. அவன் ஜெபம் பண்ண முயற்சித்தால் அவைகள் குறுக்கிட்டு அவனைத் தடைபண்ணி, நீ தேவனை விட்டு வெகு தூரம் விலகிவிட்டபடியால் அவர் உன் ஜெபத்தைக் கேட்கமாட்டாரென்று அவனுக்குச் சொல்லுகின்றன.

சில மனுஷருடைய விஷயத்திலோவென்றால், இப்பொல்லாத ஆவிகள் அவர்களுக்குரிய மனோசக்தியை முற்றிலும் அதமாக்கி, அவர்களைத் தங்களுடைய ஆதீனத் திற்குட்படுத்தி, அவர்களை மேற்கொண்டு அவர்களுடைய சரீரங்களை மதிகெட்டதனமாய் உபயோகப்படுத்துகின்றன; சுயாதீனமாக அலைய இடங்கொடுத்தால் இந்த மனிதர் மற்றவர்களுக்கு அபாயமுண்டாக்கதக்க நிலைமையில் இருக்கிறார்களென அறியப்பட்டு, பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படும் வரைக்கும் துஷ்டத்தனத்திற்கும் துன்மார்க் கத்துக்கும் பைத்தியகாரத்தனத்துக்குமுரிய செய்கைகளுக்கு அவர்களை வழி நடத்தும்படி அவர்களுடைய சரீரங்களை இந்த ஆவிகள் உபயோகிக்கின்றன. எல்லா பைத்தியக்காரரும் பொல்லாத ஆவிகளினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என நாம் சொல்லுகிறதில்லை; ஆனால் நாம் நிதானித்தறியக் கூடிய அளவில், ஆஸ்பத்திரிகளிலிருக்கும் பைத்தியக்காரர்களில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் பிசாசுகளினால் பிடிக்கப்பட்டிருக் கிறார்கள்; இந்தப் பொல்லாத ஆவிகள் அவர்களுடைய மனோசக்தியை வசப்படுத்தி அவர்களில் குடியிருக்கின்றன. இந்த ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டுப் போகாதபடி தேவன் தமது ஜனங்களைத் தமது வசனத்தின் மூலமாய் முன்னதாகவே எச்சரித்திருக்கிறார். என்றாலும், இந்த ஆவிகளின் கண்ணிகளில் அகப்படும்படி சிலர் இடங்கொடுக்கப்படுவதும்கூட ஒரு பெரிய போதனையை கற்பிக்கவே ஆகும்.அதாவது, தேவனுடைய வசனத்தை அசட்டை செய்து அதற்குக் கீழ்ப்படியாமற் போவதினாலுண்டாகும் பயங்கரமான விளைவுகளைக் கற்பிக்கவே ஆகும்.

### பிசாசுகளின் உபதேசங்கள்

நாம் உயிரோடிருக்கும் தற்காலத்தைக் குறித்து பரிசுத்த பவுல் பேசுகையில், தேவனைவிட்டு அப்புறம் போகச் செய்கிற போதனைகளையும் அப்பியாசங்களையும் கொடுக்கிற இந்த வஞ்சக ஆவிகளுக்கு அநேகர் இப்பொழுது செவிகொடுப்பார்கள் என்பதே அதினுடைய முதன்மையான அடையாளங்களில் ஒன்று என்று அவர் தெரிவிக்கிறார். தப்புவழியில் நடத்துகிற இந்த ஆவிகளினால் அநேகர் பிசாசுகளின் உபதேசங்களுக்குச் சாய்ந்து போவார்களென்று அப்போஸ்தலன் தெரிவிக்கிறார். (1 தீமோ. 4 : 1). அறிவில் மிகுந்த தேர்ச்சியை அடைந்த ஜனங்கள், மரணத்துக்குப் பின்பு நித்திய வேதனை உண்டு என்று சொல்லும் மகா பயங்கரமான உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அதில் நிலைத்திருக்க வேண்டுமென்று சொல்லுவது, அறிவை மிகுதியாகக் கொண்டு இக்காலத்திற்குச் சற்று கூட பொருந்தினதாயிராமல் மகாதுக்கமும் சஞ்சலமும் நிறைந்த வார்த்தையாய் இருக்கிறது.

மெய்யாகவே அது பிசாசுகளின் உபதேசமே; ஏனெனில் அதைவிட மேலான ஓர் ஒழுங்கை ஏற்படுத்தத் தேவன் சக்தியற்றுப் போனாரென்ற காரணத்தினாலோ, அல்லது சிருஷ்டிப்புக்கு முன்பே அவ்விதம் செய்ய தேவன் சித்தங் கொண்டு முன்குறித்துவிட்டாரென்ற காரணத்தினாலோ, மனுக்குலத்தின் தொகையில் ஒவ்வொரு ஆயிரத்துக்கும் தொளாயிரத்துத் தொண்ணுற்றொன்பது பேர் நித்திய காலமாய் வதைக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்களென்பது, தேவனுடைய நாமத்துக்கு அவமானத்தையும் இழிவையும் உண்டு பண்ணுகிறது. தேவனைக் குறித்து அவர்கள் சொல்லுகிறபடியே தாங்களே அப்படிப்பட்ட ஓர் உபதேசத்தை உண்டுபண்ணப் பிரியங்கொள்ளாமல் வெறுத்துத் தள்ளக்கூடிய அநேக கண்ணியமுள்ள ஜனங்களைப் பிசாசுகளின் இந்த உபதேசமானது ஆட்கொண்டு அவர்களை நம்பும்படி செய்துவிட்டது.

இந்த வஞ்சக ஆவிகள், இவ்விதமாக இனி மனுக் குலத்தை வஞ்சிக்காதபடி அவைகள் முற்றிலும் கட்டப்பட்டுத் தடுக்கப்பட வேண்டிய காலம் சமீபித்து விட்டதற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம். ஆனால் இந்த வஞ்சகம் வெகு காலமாய் மனுக்குலத்தைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறபடியால், ஏழை மனுக்குலமானது மிகுதியாய் அதினுடைய ஆட்சிக்குள்ளிருக் கிறது. இத்தகையப் பறைக்கெல்லாம் வழிநடத்தின மூலக் கள்ளத்தனம், ஏதேனில் நமது பெற்றோரிடம் சாத்தான் சொன்ன முதல் பொய்யேயாகும். அங்கே அவன் தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய் "நீங்கள் **சாகவே சாவதில்லை**" என்றான் (ஆதி. 3 : 4). அது முதற்கொண்டு ஆறாயிரம் வருஷங்களாக அவனும் விழுந்து போன தூதர்களும் இந்தப் பொய்யையே மனுக்குலத்தவருக்குள் உறுதிப்படுத்திக் கிரியை செய்து வந்திருக்கிறார்கள். சாத்தானுடைய வார்த்தை, "நீங்கள் **சாகவே சாவதில்லை** (நீங்கள் நிச்சயமாய் மரிக்கிறதில்லை)" என்பதே, அதாவது, மனுஷர் மரிப்பதாகத் **தோன்றுவார் களேயன்றி** அவர்கள் நிச்சயமாய மரிக்கிறதேயில்லை – அவர்கள் மரணமடைவதற்கு முன்னிருப்பதைவிட மரண மடைந்த பின்பு அதிக ஜீவனுடையவர்களாவார்கள் என்பதே.

மரித்துப்போன மனுஷர் உயிரோடிருக்கிறார்கள் என்ற இந்தப் பறையைக் காரணமாகக் கொண்டே, சாத்தானும் விழுந்துப்போன தூதர்களும் வேத உபதேசங்களுக்கு மாறாக, மோட்சம், உத்தரிப்புஸ்தலம், நரகம் முதலியவைகளைப் பற்றிய பைத்தியக்காரத்தனமான பிறமத மூடக்கொள்கைகளைப் படிப்படியாக அழுத்தமாய் உலக முழுவதிலும் கிறிஸ்தவ மார்க்கத்துக்குள் புகுத்தி விட்டார்கள். உத்தரிப்பு ஸ்தலத்திற்குப் போகிறவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறும்படியாக அவர்களுக்காக ரோமன் கத்தோலிக்கர் ஜெபிக்கிறார்கள்; பரிசுத்தவான்களான சொற்பமானவர்கள் நேரே பரலோ கத்துக்குப் போகிறார்களென்றும், பரிசுத்தவான்களாயிராத மற்றவர்களெல்லாரும் நேரே நித்திய வேதனையை அடையப் போகிறார்களென்றும் புரோட்டெஸ்டாந்தர்கள் (protestants) நம்புகிறபடியால் அவர்கள் அவ்விதம் ஜெபிக்கிறதில்லை. சாத்தான் ஆதியில் ஏவாளை வஞ்சித்து நமது குலத்தைக் கொல்ல உபயோகித்த இந்தப் பெரிய பொய் (யோவா. 8 : 44), நமது மனதை விட்டும், விசுவாசப் பிரமாணங்களை – மானிடக் கொள்கைகளை – விட்டும், முற்றிலும் நீக்கப்படுமேயாகில், அது ரோமன் கத்தோலிக்கருக்கும் புரோட்டெஸ்டாந்தர்களுக்கும் மத சம்பந்தமான ஒரு பெரிய சீர்திருத்தமாகக் கருதப்படும், அதாவது, மரித்துப்போன மனுஷரைப் போலவும் உயிரோடிருக்கிற மனுஷரைப் போலவும் உருவமெடுக்கிற விழுந்துபோன தூதர்களாகிய பொய்யின் ஆவிகளுடைய கொடுங்கோன் மையான ஆட்சியையும் வஞ்சகத்தையும் விட்டு நீங்கி, ரோமன்கத்தோலிக்கரும் புரோட்டெஸ்டாந்தர்களும் மறுபடியும் வேத புத்தகத்தின் உண்மையான உபதேசத்திற்கு வந்த சேருவதாகும்.

## தூதர்கள் சீர் கெட்டுப் போன விதம்

ஆவிகளோடு உறவாடிப் பழக்கப்பட்டவர்களிடமிருந்து நாம் படித்தறிந்தமட்டில், ஆவி மார்க்கத்தின் போக்கு நெறிதவறிய அசுத்தத்திற்கு வழிநடத்துவதேயாகும். கெட்டுப் போன இந்தத் தூதர்கள் முதலில் சீர்கேடடைவதற்குக் காரணமாய் இருந்த பாவத்தின் சம்பந்தமாய் வேத புத்தகம் சொல்லுவதற்கு இது ஒத்திருக்கிறது. பரிசுத்த யூதாவும் (யூதா 6, 7) பரிசுத்த பேதுருவும் (2 பேது. 2 : 4) தூதர்கள் கெட்டுப் போனதைப் பற்றி நமக்குச் சுருக்கமாய்ச் சொல்லுகிறார்கள். "அவர்கள் தங்க ளுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல் தங்கள் வாசஸ்தலத்தை விட்டுவிட்டார்கள்," மானிட காம விகாரத்தைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பத்தில் இரண்டு அப்போஸ்தலர்களும் இந்த விஷயத்தைச் சொல்லுகிறார்கள்.

தூதர்கள் வீழ்ச்சியைப் பற்றிய சரித்திரம் ஆதி. 6 : 1-4-ல் நமக்குச் சுருக்கமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனுஷன் பாவத்தில் விழுந்த பின்பு, அவர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளும்படி, தேவன் பரிசுத்த தூதர்களுக்கு இடங்கொடுத்தார். ஆவிக்குரிய தேகமுள்ளவர்களை மானிட கண்களால் பார்க்கமுடியாததால், மனுஷ உருவம் எடுத்துக் கொள்ளும்படி, தேவன் தூதர்களுக்கு இடம் கொடுத்தார். உதாரணமாக, மம்ரேயின் வெளிகளில் ஆபிரகாமைச் சந்தித்த தூதர்களின் விஷயத்தை நாம் இங்கு குறிப்பிடுகிறோம். (ஆதி. 18). ஆபிரகாம் அவர்களுக்காக இளங்கன்றைச் சமைத்தான். சடத்துவ சரீரத்தை எடுத்துக்கொண்டதினால் இந்தத் தூதர்கள் மனுஷரைப் போல் இருந்தார்களென்றும், அவர்கள் போஜனம் அருந்தி ஆபிரகாமோடே சம்பாஷித்ததினால் அவன் அவர்களை மனுஷரென்று நினைத்தானென்றும் நாம் வாசிக்கிறோம். அவர்கள் பரலோகத்திலிருந்து வந்தவர்களென ஆபிரகாம் பின்னால் அறிந்துகொண்டான். தேவ தூதர்கள் அப்படிப்பட்ட சடத்துவ சரீரங்களை வேறு சந்தர்ப்பங்களிலும் எடுத்துக் கொண்டார்கள் என நாம் வாசிக்கிறோம். உதாரணமாக, லோத்து, யாக்கோபு, பிலேயாம், கிதியோன், மனோவா, தாவீது, சகரியா, மரியாள் ஆகியோரின் முன்பும் வேறு சந்தர்ப்பங்களிலும் தேவ தூதர்கள் மனுஷரைப்போல் தோன்றியிருக்கிறார்கள்.

அப்படியேதான் ஜலப்பிரளயத்துக்குமுன் தேவ தூதர்களெல்லாரும் சடத்துவ சரீரங்களில் காணப்பட்டார்கள். சடத்துவ சரீரங்களை எடுத்துக்கொண்டு மனுஷரென்று சொல்லப்படத்தக்கதாக மனுஷர் போல தோன்றவும் அவர்கள் இடங்கொடுக்கப்பட்டார்கள். இவர்களில் சிலர் இச்சையுள்ள (காம விகாரமுள்ள)வர்களானார்கள் என வேத புத்தகம் சொல்லுகிறது. (ஆதி. 6) "தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரிய முள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்" என்று நாம் வாசிக்கிறோம். (வா. 2). மனுஷனைவிட மேலான சத்துவங் களையும் அறிவையுமுடைய தூதர்கள் மனுஷருக்கு அதிகாரிகளாய் இருந்தார்கள். மனுஷரோ அவர்களுடைய கட்டளைப்படி நடக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். (எபி. 2 : 5). அதினாலுண்டான பலன் சுருக்கமாய் சொல்லப் பட்டிருக்கிறது. நமது குலத்தில் தோன்றியிருந்த சாதாரணமான மனுஷரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த கெட்ட சம்பந்தத்தினால் பிறந்த பிள்ளைகள் இராட்சதர்களாக இருந்தார்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சடத்துவ சரீரங்களில் இராட்சதர்களாய் இருந்தது மாத்திரமல்ல, அறிவுக்கடுத்த விஷயத்திலும் பேர் போனவர்களாயிருந்தார்கள் – "அவர்கள் பேர் பெற்ற மனுஷராயிருந்தார்கள்" இந்தக் குலத்தோடு மனுக்குலமானது கலந்து ஜீவித்து அவர்களை மேற்கொள்ளமுடியாமற்போயிற்று. சச்சரவும் குழப்பமும் பாவமும் இச்சையுமுள்ள அப்பியாசங்களும் பூமி முழுவதும் பெருகிப் போய்விட்டதே அதினாலுண்டான பலனாயிருந்தது. மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் தேவனும் அறிவித்தார். ஆதி. 6 : 5.

## தன் காலத்தில் உத்தமனாயிருந்த நோவா

இதையெல்லாம் தேவன் முன்னதாகவே அறிந் திருந்தார்; சனிகிரகத்தைச் சுற்றி இப்பொழுது வளையங்கள் இருப்பதற்கு ஒப்பாக, அப்பொழுது பூமியை சுற்றி இருந்த தண்ணீர் வளையம் (canopy of water), பொல்லாத மனுஷரும் தூதருக்குப் பிறந்த மானிடப் பிள்ளைகளும் அழிக்கப் படத்தக்கதாக, முன்பே ஆயத்தமாய் வைக்கப்பட்டிருந்தன. ஜலப்பிரளயத்துக்குப் பின்பு மனுக்குலமானது கலப்பில்லாமல் சுத்த மனித ஜாதியாய்ப் பெருகுவதற்கு, நோவாவும் அவன் குடும்பமுமே பாதுகாக்கப்படுவதற்குப் பாத்திரவான்களாக காணப்பட்டார்கள். நோவாவின் குடும்பத்தைப் பற்றி வேத வாக்கியங்கள் அறிவிக்கிறதாவது, "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந் தான்"என்பதே. அவன் சரியான பிரகாரமாய் ஜெனிப்பிக்கப் பட்டுப் பிறந்திருந்தான்; – அவனுடைய பிள்ளைகளும் அப்படியேதான் பிறந்திருந்தார்கள்; அந்தக் குடும்பத்தில் தேவதூதர்களின் கலப்போ அல்லது சீர்கேடான குணமோ இருந்ததில்லை. மனுக்குலத்தில் மீதியானவர்களெல்லாரும் அந்தக் கெட்டுப்போன தூதர்களின் வஞ்சகங்களினாலும் கற்பழிவுகளினாலும் சீர்கேடடைந்து உயிரோடிருப்பதற்குத் தகுதியற்றவர்களாய்ப் போனார்களென்று தெளிவாய் அறிவிக்கப்படுகிறது. நோவாவும் அவன் குடும்பமுமாகிய எட்டுப்பேர் நீங்கலாக முழு மனுக்குலமும் சீர்கெட்டுப் போயிற்று.

கெட்டுப்போன தூதர்கள் ஜலப்பிரளயத்தில் அழிக்கப் படவில்லை என்பதற்குச் சந்தேகமில்லை; ஏனெனில் சடத்துவ சரீரத்தை எடுத்துக்கொள்ள அவர்களுக்கு சக்தியிருந்தது மாத்திரமல்ல, அவ்விதம் எடுத்துக்கொண்ட சரீரத்தைக் குலைத்துப் போட்டு முன்போல அவர்களுடைய இயல்பான ஆவிக்குரிய சரீரத்தில் நிலைத்திருக்கவும் அவர்களுக்குச் சக்தியிருந்தது. என்றாலும் அக்காலத்தில் கெட்டுப்போன தூதர்கள் எல்லாரும் காவல் பண்ணப்பட்டார்கள், அதாவது, வெளிச்சத்தில் அவர்கள் சடத்துவச் சரீரத்தை எடுத்துக்கொள்ள இடங்கொடுக்கப்படவில்லை. இந்தக் காவல் "மகா நாளின் நியாயத்தீர்ப்பு வரைக்கும்" இருக்கும். அவர்களுடைய காவல்கள் அல்லது சங்கிலிகள், சடத்துவமானவையல்ல; ஆனால் அவைகள், அவர்களைப் பூமிக்குரிய ஆகாயமண்டலத்தில் காவல்பண்ண போதுமான வல்லமை பெருந்தினவைகளாய் இருக்கின்றன. அதிலே அவர்கள் தங்கள் இஷ்டம்போல் அலைந்து திரியலாம்; ஆனால் வெளிச்சத்தில் சடத்துவ சரீரத்தை எடுத்துக்கொள்ளாதபடி காவல் பண்ணப்பட்டிருக்கிறார்கள். (சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறார்கள்). இப்பொழுதும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் புது யுக ஏற்பாடு ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னே இந்தப் பொல்லாத ஆவிகள் தங்களுடைய சங்கிலிகளிலிருந்து விடுதலையடைய ஓரளவு இடங்கொடுக்கப் படுகிறார்கள் என்றும், புதுயுக ஏற்பாட்டின் ஸ்தாபகத்துக் கேதுவான மகா பெரிய துன்ப காலத்துக்குச் சம்பந்தமாய் இவர்கள் தங்களை மனுஷரைப்போல வெளிச்சத்தில் வெளிப்படுத்துவார்களென்றும் வேதவாக்கியங்களினால் அறியக்கூடியதாய் இருக்கின்றன.

## பிசாசுகளின் செயல்பாடுகள்

தேவனோடும் பரிசுத்த தூதர்களோடும் அன்னியோன னியமாய் இருக்கமுடியாமல் அவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டது மல்லாமல், மானிட சரீரங்களையும் எடுத்துக்கொள்ளச் சக்தியற்றுப்போய், பாவஞ் செய்த தூதர்கள் கடந்த 4000 வருஷங்களாக பயங்கரமான அனுபவங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனைவிட்டுப் பிரிந்தவர்களுக்குள்ளே உண்மையான சந்தோஷமும் பாக்கியமும் இருக்க முடியாது. பிசாசின் கிரியைகளாகிய கோபம், மூர்க்கம், பகை, சண்டை முதலியவைகள், பரிசுத்த நிலைமைக்கு மாத்திரமுரியவை களாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் முதலியவைகளோடு பொருத்தமும் இணக்கமுமாய் இருக்க முடியாதென்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். கலா. 5 : 19-23.

அப்படிப்பட்ட விஷயங்களினிமித்தம், கெட்டுப்போன தூதர்கள் மனுஷரோடு அன்னியோன்னியமாய் இருப்பதை (மனுஷருடைய கூட்டுறவை) நாடுவார்களென்பது ஆச்சரிய மல்ல. பிசாசுகளின் அதிபதியாகிய சாத்தானுடைய ஆட்சிக் குள்ளிருப்பதினால் (மத். 9 : 34) அவர்கள் அவனுடைய போக்கைப் பின்பற்றி, "நீங்கள் **சாகவே சாவதில்லை**" என்று அவன் சொன்ன முதற் பொய்யையே மனுஷருக்குள் பரப்பிக்கொண்டு வருகிறார்கள். பிற மதஸ்தரின் நரக உபதேசத்தையும், கத்தோலிக்கரின் நரகம், உத்தரிப்புஸ்தலம் முதலியவற்றின் உபதேசத்தையும், எல்லாவற்றிற்கும் கேவல மாக, பரிசுத்தவான்களாகிய சிறு கூட்டத்தாரைத் தவிர மற்றெல்லா மனுஷரும் முடிவில்லாத காலமாய் பயங்கரமான வேதனையை அடைவார்களென்ற புரோட்டெஸ்டெண்ட் மதத் தப்பான எண்ணத்தையும் இப்பிசாசுகள் மனுஷருடைய இருதயங்களில் நிலைபெறச் செய்திருக்கின்றன.

பிசாசுகளின் இந்த உபதேசங்கள் தேவனுக்கும் மனுக்குலத்துக்குமுள்ள பிரிவினையை அதிகப்படுத்தி, அவருடைய அன்பின் செய்தியடங்கிய வேத புத்தகத்தை, திகிலையும் திகைப்பையும் உண்டாக்கும் பயங்கரங்கள் அடங்கிய புத்தகமாக ஆக்கிவிட்டன. - வேத புத்தகத்தின் மேல் உண்மையான அன்புவைத்து அதின் போதனைகளின் மேல் பிரியங்கொள்ளவிடாமல் செய்து, கூடுமாகில், உத்தரிப்பு ஸ்தலத்தில் ஒரு பசுமையான இடத்தையோ அல்லது நித்திய வேதனையினின்று தப்பித்துக் கொள்வதையாவது அடைந்து கொள்வதற்கு ஒரு சாதனமாக வேத புஸ்தகத்தை வஞ்சகமாய் உபயோகப்படுத்தச் செய்திருக்கின்றன. கிறிஸ்தவ மண்டலத்தில் இருண்ட யுகங்களில் மனுஷரால் உண்டான விசுவாசப் பிரமாணங்களில் காண்பிக்கப்பட்டிருக்கும் இப்பொய்யான உபதேசங்கள் அனைத்தும் பிசாசுகளின் உபதேசங்கள் என்று நாம் தாராளமாய்ச் சொல்லலாம்; நமது மனங்களும் நமது ஞானப்பாட்டுப் புஸ்தகங்களும், நமது விசுவாசப் பிரமாணங் களும், யாவுமே அசுத்தமாய் போய்விட்டன.

புது யுக ஏற்பாட்டுக்குரிய வெளிச்சமானது, நம்மை அந்தகாரத்துக்குட்படுத்தின சில விஷயங்களிலிருந்து நம்மை விடுதலை பண்ணி, நம்மை இப்பொழுது ஆரம்ப ஆசீர்வாதத்தை அடையும் வழிக்குக் கொண்டுவருகிறது என்பதை அறிந்து தேவனை ஸ்தோத்தரிப்போமாக. பாவத்திற்குரிய உண்மையான தண்டனை **மரணம் – ஜீவன் இல்லாமற் போகுதல்** என்றும் (ரோம. 6 : 23), அது நித்திய வேதனை அல்ல என்றும் அறிந்து கொள்வதே, நாம் ஞானப்பிரகாசமடைந்திருக்கிறோம் என்பதற்குச் சம்பந்தமாகவுள்ள மகா முக்கியமான விஷயங் களில் ஒன்றாகும். மரித்தோர் உண்மையில் மரித்துப் போயிருக்கிறார்களென்றும், வேத புத்தகம் சொல்லுகிறபடி, அவர்கள் உயிர்த்தெழுதலை அடையும் வரைக்கும் ஒன்றும் அறியார்களென்றும் (பிர. 9 : 5, 10), நாம் அறிந்துகொள்வோ மானால், தேவனுடைய ஏற்பாட்டின் மகத்துவத்தைக் கண்டு கொள்ள நாம் ஆரம்பிக்கிறவர்களாயிருப்போம். – கிறிஸ்துவின் மரணத்தின் அவசியத்தையும், அவருடைய இரண்டாம் வருகையின் அவசியத்தையும், அவருடைய இராஜ்ய ஸ்தாபகத் தின் அவசியத்தையும், உயிர்த்தெழுதலின் அவசியத்தையும், இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலுண்டான மீட்பின் கிரியையைப் பற்றிய சிறந்த சத்தியத்தை அறியும் திட்டமான அறிவையும், தேவனுடைய கிருபையினால் நித்திய ஜீவனை அடைந்து கொள்வதற்குத் தகுந்த வசதியையும் பெற்றுக்கொள்ள மனுக்குலம் முழுவதுக்கும் வேண்டிய தக்க சமயத்தின் அவசியத்தையும் நாம் கண்டறிந்து கொள்வோம். – சுவிசேஷ யுகத்தில் (சபையானது, தெரிந்தெடுக்கப்படும் காலத்தில்) புது சிருஷ்டிகளாகிப் பரம அழைப்புக்கு உட்படுகிறவர் கள் (எபி. 3 : 1) தேவ தூதர்களைப் போல் ஆவி ஜீவிகளாகிப் பரலோகவாசிகளாவார்கள் என்றும், புது யுகத்தில் (ஆயிர வருஷ அரசாட்சிக் காலத்தில்) உலகம் (மீதியான மனுக்குலம் முழுவதும் – மரித்தோரும் உயிருள்ளோரும்) பொதுவான இரட்சிப்பை அடையும் காலத்தில் ஆதாமுக்குள் இழந்துபோன மானிட பூரணத்தைப் பெற்று பூமிக்குரிய பரதீசில் என்றைக்கும் உயிரோடிருப்பார்கள் என்றும், ஆனால் சுவிசேஷ யுகத்திலும் புது யுகத்திலும் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களோ நித்திய அழிவாகிய தண்டனையை – இரண்டாம் மரணத்தை அடைவார்களென்றும் அறிந்து கொள்வோம்.

## பிசாசுகளைத் துரத்துதல்

அசுத்த ஆவிகளால் பிடிக்கப்பட்டிருந்தவர்களிடமுள்ள பிசாசுகளை நமது இரட்சகர் துரத்தி தமது வல்லமையை வெளிப்படுத்தினார். எல்லாவித வியாதிகளையும் சுகமாக்கவும், அசுத்த ஆவிகளைத் துரத்தவும் தமது அப்போஸ்தலருக்கு அதிகாரம் கொடுத்து அவர்களை அனுப்பினாரென்று நாம் வாசிக்கிறோம். (மத். 10 : 1). அவர்கள் இவ்விதம் நடப்பித்தார்க ளென்று நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஏராளமான கிரியைகள் திருஷ்டாந்தங்களாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மனிதனை ஒரு லேகியோன் பிசாசுகள் பிடித்திருந்தன. அந்த மனுஷன் பைத்தியம் பிடித்துப் போயிருந்தானென்பது ஆச்சரியமல்ல. ஆனால் அவைகள் அவனைவிட்டுத் துரத்தப்பட்ட பின்பு, அவன் வஸ்திரந்தரித்து புத்தி தெளிந்தவனாகி ஒரு சீஷன் ஆனான் (லூக். 8 : 26-36). பரிசுத்த பவுலும் சீலாவும் அடைந்த அனுபவத்தைக் கவனிப்போம். குறி சொல்ல ஏவும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு பெண் இருந்தாள். அவள் தன்னைப் பிடித்திருந்த பொல்லாத ஆவியின் வல்லமையைக் கொண்டு குறி சொன்னாள். பொல்லாத ஆவிகள் இயேசுவை இனமறிந்து, "இயேசுவே, நீர் இன்னாரென்று நாங்கள் உம்மை அறிவோம்" என்று சத்தமிட்டதுபோல, இந்த ஆவியும் அப்போஸ்தலரை அறிந்து அவர்களைப் பின் தொடர்ந்து போய் அப்பெண்ணின் உதடுகளின் மூலமாய், "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்; இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டது. (அப். 16 : 16-18). இயேசுவும் அப்போஸ்தலர்களும் பிசாசுகளின் சாட்சியை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல், அவைகள் குடிகொண்டிருந்த ஆட்களைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார்கள்.

இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் கெட்டுப்போன தூதர்களின் மூலமாய் பிரமிப்படையச் செய்யும் செயல்கள் நடைபெறும் என்று வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. கபட வேலைகள் வழக்கமில்லாத வகையாய் சகல தந்திரங்களோடு கடுமையானதாய் இருக்குமென்று நமது கர்த்தர் அறிவித்தார். (மத். 24 : 24) என்றாலும், கண்ணியில் அகப்படச் செய்வதும், கபடமானதும், தப்பு வழியில் நடத்துவதுமான தப்பறைகள் எவ்வளவாய் மேம்பாடடைந்து வியாபித்திருந்த போதிலும், தம்முடைய ஜனங்களைப் பலப்படுத்திப் பாதுகாக்க தேவன் வேத வாக்கியங்களை உபயோகிப்பதினாலும், பரிசுத்த விசுவாசத்தில் அவர்கள் ஒருவரையொருவர் ஸ்திரப்படுத்தத்தக்கதாக அவர்களை உபயோகிப்பதினாலும், அவர்கள் இந்தத் "தீங்கு நாளில்" நிற்கவும் திராணியுள்ளவர்களாய் இருப்பார்கள். (எபே. 6 : 13). விழுந்துபோன தூதர்களானாலும், அதிகாரங் களானாலும், வல்லமைகளானாலும் கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு அவர்களைப் பிரித்துவிட திராணியற்றவர்களாய் இருப்பார்கள். (ரோம. 8 : 38, 39).

## பிசாசுகளுக்கு அதிகமான சுதந்திரம் கொடுக்கப்படுதல்

வேத வாக்கியங்களை நாம் கவனித்துப் பார்ப்போ மானால், கெட்டுப்போன தூதர்கள் சுவிசேஷ யுக முடிவில் தேவ காவலிலிருந்து ஒரளவில் விடுதலையடைந்து மரித்துப்போன மனுஷருடைய தேகங்களை மாத்திரமல்ல, சில சமயங்களில் உயிருள்ளோருடைய தேகங்களையும் பட்டப் பகலில் எடுத்துக்கொள்ளலாமென்பதைப் பற்றி நாம் ஆச்சரியப்படத் தேவை இல்லை. அப்படிப்பட்ட விஷயங்கள் முன்பே ஆரம்பித்து விட்டதென்றும், அவை கொஞ்சக் காலத்திற்குள் வெகு விஸ்தாரமான அளவில் நடைபெறுவதற்கேதுவாய் இருக் கின்றன என்றும் ஆவிகளோடு உறவாடுகிறவர்கள் சொல்லு கிறார்கள். தேவனுடைய ஜனங்கள் அவருடைய கண்காணிப்புக்குள் நம்பிக்கையோடும் உறுதியோடும் சுகமாய் தங்கியிருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் அசுத்த ஆவிகளின் ஏவுதலினால் செய்யப்படும் சகலவித தந்திர மந்திர அந்தகாரக் கிரியைகளோடு சம்பந்தப்பட்ட எதற்கும் (Spirutualism, Occultism, Hypnotism) எதிர்த்து நிற்கவும், சில விஷயங்களைக் குறித்து தங்கள் சிநேகிதர்களை எச்சரித்துப் புத்தி சொல்லவும் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். இந்தப் பொய்யின் ஆவிகளின் செய்கைகளையும் சக்திகளையும், ஆத்தும தத்துவ சாஸ்திரமென்ற பெயரால் ஆராய்ச்சி செய்து வருகிற ஏராளமான சாஸ்திர ஆராய்ச்சிக்காரரும் சில கல்விமான்களும் அவைகளின் கண்ணிகளில் பிடிபட்டு அலைகிறார்கள். சம்பாஷணைகளை நடத்துகிற பிசாசுகளை, மரித்துப்போன மனுஷர்களே என்று அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

சாத்தான் முற்றிலும் கட்டப்பட்டு (வெளி. 20 : 1-3) சகல பொல்லாத சத்துவங்களும் முற்றிலும் அடக்கப்படுகிற காலத்தைச் சமீபித்து வந்துவிட்டோமென்பதை அறிந்து தேவனை ஸ்தோத்திரிப்போமாக. பிசாசுகளின் இயல்பான சரீர சம்பந்தமான பிடிப்பினின்று மாத்திரமல்ல, பிசாசுகளின் உபதேசங்களினின்றும் முழுவதுமாய் சுத்திகரிக்கப்பட்டு விடுவிக்கப்படுதல் உண்டாகும்.

## மனுக்குலத்தின் தவறுதல் தூதர்களையும் சிக்கப்பண்ணினது

நாம் இதுவரை கெட்டுப்போன தூதர்களின் குணங்களைப் பற்றி ஆராய்ந்ததறிந்திருக்கிறோம். முதலில் சாத்தானுடைய பெருமையினாலும் கலகத்தினாலும் உற்பத்தியாகி, மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலும் தேவ தயவினின்று விழுதலினாலும் நிலைப்படுத்தப்பட்டு அதிகரித்த புளித்த மாவாகிய பாவத்துக்கு அந்தத் தூதர்கள் இணங்கிப் போனார்களென்றும் நாம் பார்க்கிறோம். தூதர்களையும் அவர்களின் விழுந்து போகுதலையும்பற்றி ஏன் எழுத வேண்டும்? நமது ஆராய்ச்சிகளெல்லாம் ஏன் மனிதனைப் பற்றியதாகவே இருக்கக்கூடாது? என்று சிலர் கேட்கத் துணியலாம். நாம் முன்பே பார்த்திருக்கிறபடி மனுஷனுடைய விழுந்து போகுதலுக்கும் தூதர்களுடைய வீழ்ச்சிக்கும் சம்பந்தமிருக்கிறபடியாலும், சடத்துவ மானத சன்மார்க்க விஷயங்களிலும் தேவ பக்திக்கடுத்த விஷயங்களிலும் மனுஷன் அதிகமான கேடு அடைவதற்கு விழுந்துபோன (தவறிப்போன) தூதர்களும் முக்கியமான காரணஸ்தராய் இருக்கிறபடியாலும், கெட்டுப்போன தூதர்களாகிய இப்பொல்லாத ஆவிகளைப் பற்றி எழுத வேண்டியது அவசியமாகும் என்பதே, அக்கேள்விக்கு நமது உத்தரவாகும். "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் (மாத்திரம்) அல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் .......... வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்று பரிசுத்த பவுல் சொன்னது உண்மையேயாகும். எபே. 6 : 12.

விழுந்துபோன (தவறிப்போன - கெட்டுப்போன) ஆவிகள் மனுஷரோடு நெருங்கிப் பழகுகின்றன என்பதும், அவை தேவனுக்கும் சத்தியத்துக்கும் விரோதமானதும், மனுஷரைப் பொல்லாப்புக்கு உட்படுத்தி ஆசைகாட்டி கெட்ட வழிக்கு இழுத்துக் கண்ணியில் அகப்படுத்தித் தொடர்ச்சியாய் நெறி வழுவச் செய்வதுமான சக்தியையுடையவை என்பதும், மூட நம்பிக்கை யானது என்று அநேகர் சொல்லிப் பரிகாசம் பண்ணுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஆவிகளின் போதனைகளையும் செய்கைகளையும் பற்றி (ஆவி மார்க்கத்தைப் பற்றி) வேத புத்தகத்தின் மூலமாகவே நாம் விசேஷமாய் அறிந்து கொள்கிறோம். ஆனால் அந்த அறிவு, ஆவிகளின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டிருக்கிற ஏராளமானவர் களுடைய சாட்சிகளினால் சரியாக நன்றாய் ஒப்புக் கொள்ளத்தக்கபடி ஆதரிக்கப்படுகிறது. நாம் வேத புத்தகத்தின் போதனைகளை முழுவதுமாய் ஒப்புக்கொள்ள வேண்டும், அல்லது, அவைகளை முழுவதுமாய்த் தள்ளிப்போட வேண்டும். நமது சொந்த நினைவுகளையும் வார்த்தைகளையும் நடக்கையையும், மற்றவர்களுடையவைகளையும் வேத புத்தகத்தில் தேவன் கொடுக்கிற போதனைகளுக்கு இணக்க முள்ளவைகளாக வைத்துக்கொள்வதே நமது இடைவிடாத உறுதியான முயற்சியாய் இருக்க வேண்டும். இதற்கு மாறான எவ்வித நோக்கமும் செய்கையும் முற்றிலும் அபாயகரமானவை என நாங்கள் நம்புகிறோம்.

## பிசாசுகள் தேவனை எப்படித் தூஷிக்கின்றன?

விழுந்துபோன - கெட்டுப்போன - தூதர்கள், வேத புத்தகத்தில் அசுத்த ஆவிகள், **பிசாசுகள்** என அழைக்கப் படுகிறார்கள். சுவிசேஷத்தின் சத்திய போதனையை சீர்கெடச் செய்தது நமது முற்பிதாக்கள் அல்ல, இந்தப் பிசாசுகளே என்று நாம் குற்றஞ்சாட்டுகிறோம். அவைகளின் கள்ளத்தனமான போதனைகளை "பிசாசுகளின் உபதேசங்கள்" (1 தீமோ. 4 : 1) என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுச் சொல்வதினால் இந்தக் கருத்து உண்மையானது என உறுதிப்படுத்தப்படுகிறது. எவ்வகையிலாயினும் வெளிச்சத்துக்குப் பதிலாக இருளையும் இருளுக்குப் பதிலாக வெளிச்சத்தையும் தோற்றுவிக்க அவைகள் முயலுகின்றன. தற்காலத்தில் சந்தேகிக்கப்பட்டு நம்பப்படாமற்

போகிற இருண்ட யுகங்களிலுண்டான உபதேசங்களின் மூலமாய், சித்திரவதை வேலை நடைபெறும் ஒரு மண்டபத்தை தேவன் ஏற்படுத்தி, தெரிந்தெடுக்கப்படுகிற பரிசுத்தவான்களைத் தவிர மற்றெல்லா மனுக்குலத்தையும் தீயினால் வெந்து போகக்கூடாததும் நீண்ட கவைக் கொம்புகளை உடையதுமான பிசாசுகளைக் கொண்டு அதில் நித்திய காலமாய் வேதனை யடையச் செய்வதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறா ரென்னும் போதனையினால் இந்தப் பிசாசுகள் அவரைத் தூஷித்து வருகின்றன. இவ்விதமாக, மானிட மனமானது பயத்தினால் ஏவப்பட்டு சர்வ வல்லவருக்கு விரோதமாகத் திருப்பப்பட்டது. இவ்வாறு சாத்தானும் அவனுடைய கூட்டாளி களான பிசாசுகளும் (கெட்டுப்போன தூதர்களும்) வெகு தூரத்துக்கு அப்பால் ஓர் இடத்தில் இருப்பதாக நினைத்துக் கொள்ளவும் மனுக்கலமானது கற்றுக் கொண்டது.

இப்பொழுது மிகுந்த அறிவு உண்டாகி, கால எல்லையில்லாமல் சித்திரவதை செய்யப்படுவார்கள் என்ற நித்திய வேதனையின் உபதேசமானது ஒரு வஞ்சகமான கோட்பாடு என்று மனுக்குலமானது ஆராய்ந்து அறிகிறபடியால், இந்தப் பிசாசுகள் சத்தியத்தை அறிய முயலுகிறவர்களை நேர்விரோத மான வகையாய் நடத்தி, அப்படிப்பட்ட நித்திய வேதனையுள்ள இடமில்லாததினால் பிசாசுகளும் கிடையவே கிடையாதென்று அவர்களுக்குப் போதிக்கின்றன. ஆனால் இப்பொல்லாத ஆவிகள் பூமிக்குரிய நமது ஆகாய மண்டலத்தில் நமக்குச் சமீபமாய் இருந்து வருகின்றன என்றும், நமது உள்ளத்தை அவைகளுடைய யோசனைகளுக்கும் நமது மனதைப் பாவத்துக்கும் நாம் இடங்கொடுக்கிற அளவுக்குத் தக்கதாக அவைகள் நம்மேல் அதிகாரம் செலுத்துகின்றன என்றும் வேத புத்தகம் எக்காலமும் நமக்குப் போதித்துவருகிறது. சாத்தான் வெகு தூரத்திலிருப்பதாகச் சொல்லாமல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிப் பூமியெங்கும் சுற்றித் திரிகிறானென்றும் (1 பேது. 5 : 8), விழுந்துபோன தூதர்களாகிய அவனுடைய சேனை உலகம் முழுவதிலும் தற்காலத்தில் பொய்யைப் பரப்புகிற சக்திகளாக இருக்கின்றன. அப்போஸ்தலன் கூறுகிறார் (எபே. 2 : 2) ; அது போலவே "தீயோனினின்று எங்களை இரட்சியும்" என்று ஜெபிக்கும்படி இயேசுவும் நமக்குச் சொல்லுகிறார். சாத்தான், "ஆதி முதற்கொண்டு மனுஷ கொலைபாதகன்; அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை" என்றும் இயேசு சென்னார். (யோவா. 8 : 44).

விழுந்துபோன தூதர்கள் ஜலப்பிரளய காலத்தில் சிறைப்படுத்தப்பட்டார்கள் என பரிசுத்த பேதுரு சொல்லுகிறார். டர்டாரஸ் (Tartarus) என்ற கிரேக்க பெயர்ச்சொல்லில் இருந்து உண்டான டர்டாரூ (Tartaroo) என்ற கிரேக்க வினைச்சொல் வேத புத்தகத்தில் ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் வருகிறது. (2 பேது. 2 : 4). இப்பதம், "**நரகத்திலே தள்ளி**" என தப்பிதமாய் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. டர்டாரஸ் (Tartarus) என்ற வார்த்தைக்கு, "பொல்லாத ஆவிகளுக்கு ஏற்பட்ட காவற்கூடம் (சிறைச்சாலை)" என கிரேக்கர் அர்த்தங் கொண்டார்கள். ஆகவே டர்டாரூ (Tartaroo) என்பது சிறைப்படுத்து (காவலில் வை) என அர்த்தங்கொள்ளும். வேத புத்தகத்தின்படி பிசாசுகள் பூமிக்குரிய ஆகாய மண்டலத்தில் காவல் பண்ணப்பட்டிருக்கிறார்கள். ஆகாய மண்டலமே அவர்களுடைய காவற்கூடம். அது, காவல் பண்ணப்பட்டிருக்கும் ஓர் இடத்தை அல்லது நிலைமையைக் குறிக்கும். அவைகள் தங்களை இருட்டில் மாத்திரம் வெளிப்படுத்திக் காட்டும் (எபே. 2 : 2; மத். 12 : 24-27; எபே. 6 : 11, 12; 2 பேது. 2 : 4; யூதா 6).

## சாத்தான் – தேவனுடைய பெரிய எதிராளி

சாத்தான் என்னும் பெயருக்கு எதிராளி என அர்த்தம், அதாவது, அவன் தேவனுடைய எதிராளி. நியாயமாய் அவன் இந்தப் பெயருக்குப் பாத்திரமானவன்; ஏனென்றால் விடிவெள்ளி (Lucifer) என்னும் பெயரால் முன்னே அறியப்பட்டிருந்த இவன் இப்பொழுது தேவனுக்கும் அவருடைய ஏற்பாட்டின் ஒவ்வொரு அம்சத்துக்கும் விரோதமாகக் கங்கணம் கட்டி நிற்கிறான். (ஏசா. 14 : 12-14). சர்வ வல்லமையுள்ள தேவன் சாத்தானை எந்தச் சமயத்திலும் அழித்திருக்கக்கூடும். ஆனால் பாவத்தின் பொல்லாத போக்கை வெளிப்படுத்திக் காட்டவும், அதற்குமாறாக பரிசுத்தத்தின் அலங்காரத்தை வெளிப்படுத்திக் காட்ட ஓர் அவகாசத்தைக் கொடுக்கவும் தக்கதாகக் கடந்த ஆறாயிரம் வருஷங்களாக அவன் தன் போக்கிலே செல்லத்தக்கதாக அவர் அவனுக்கு இடங்கொடுத்திருக்கிறார். கடைசியாக, வேண்டிய – தேவையான – போதனையானது தேவ தூதர்களுக்கும் மனுஷருக்கும் போதிக்கப்பட்டுத் தீர்ந்ததும், சாத்தானும் பாவத்தைச் சிநேகிக்கிற யாவரும் இரண்டாம் மரணத்தினால் முற்றிலும் அழிக்கப்பட்டுப் போவார்கள். (எபி. 2 : 14; வெளி. 20 : 10-15; 21 : 8).

சாத்தானுடைய சாதனையையும் அவனுடைய வெட்கங்கெட்டத்தனத்தையும் கவனியுங்கள். கீழ்ப்படியாமை யானது மரண தண்டனையை அவர்கள் மேல் கொண்டுவந்து விடுமென்று தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தெளிவாகவும் திருத்தமாகவும் சொன்னார். சாத்தானோ சர்வ வல்லமையுள்ள தேவன் சொன்னதற்கு நேர் எதிரிடையாக, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொன்னான். பாவத்திற்குரிய (கீழ்ப்படியாமைக்குரிய) தண்டனை மரணம் என்று தேவன் தங்களுக்குச் சொன்ன வார்த்தையின் உண்மையை மனுக்குலமானது அறிந்திருந்த பொழுது, மனுஷர் சாகிறது போல தோன்றுவார்களேயன்றி உண்மையில் அவர்கள் சாகிறதில்லை யென்றும், மரிக்கும் மனுஷன் உயிரோடிருக்கிறவனை விட அதிகமான அளவில் உண்மையாகவே உயிரோடிருப்பான் என்றும், சாத்தான் சொல்லித் தேவனுடைய வார்த்தையைப் புரட்டினதுமல்லாமல் மனுஷருடைய மனதையும் தவறான வழியில் நடத்த வகைதேடினான். இவ்விதமாக, நமது ஆதிப்பெற்றோரைப் பாவத்துக்குட்படுத்தினதுமல்லாமல் நியாயத் துக்கு விரோதமான இந்தப் பொய் நமது மனுக்குலத்துக்குத் திரும்பத் திரும்ப நாளுக்கு நாள் பல நூற்றாண்டுகளாகச் சொல்லப்பட்டு, தற்காலத்தில் மனுக்குலம் முழுவதும் சாத்தானுடைய பொய்யில் நம்பிக்கை வைத்து தேவனுடைய வார்த்தையை முற்றிலும் நம்பாமற் போய்விட்டது.

நியாயத்தை, நீதிப்பிரகாரம் பரீட்சித்துக் கண்டறிந்து, தெளிந்த புத்தியுடன் தேவனோடு ஒப்புரவாகுதல், சாத்தான் சொன்ன பொய்யை நிராகரித்து நீக்கிப் போட்டு, தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக்கொள்வதினாலேயே ஆகும். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; அவர்கள் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவர்கள் உணரார்கள்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களை கவனியார்கள் (பிர. 9 : 5; யோபு 14 : 21). சாத்தானுடைய ஆதிப் (முதற்) பொய்யே தற்காலத்திலுள்ள தேவ பக்திக்கடுத்த மூடநம்பிக்கைகளில் அநேகத்துக்கு மூலாதாரமானது, மனுக்குலமானது தேவனை விசுவாசித்து தேவனுடைய வசனமாகிய வேத புத்தகம் சொல்லுகிறபடி, மரித்தோர் **மரித்தோரே** என்றும், மறுமைக்குரிய அவர்களுடைய ஒரே நம்பிக்கை **உயிர்த்தெழுதலின்** மூலமாகவே என்றும் நம்புவார்களேயானால் அந்த நம்பிக்கையானது ஆயிரக்

கணக்கான மூடப் பக்திகளை இவ்வுலகத்தினின்று நீக்கிவிடும். வேத புத்தகம் சொல்லுகிறபடி மரித்தோர் ஒன்றும் அறியார்களானால், அவர்கள் எப்படி புரொட்டெஸ்டெண்ட் மதம் (protestants) போதிக்கிற நரகத்திலாவது, அல்லது கத்தோலிக்க மதம் போதிக்கிற உத்தரிப்பு ஸ்தலத்திலாவது வேதனைகளையும் இம்சைகளையும் அடைந்து கொண்டிருக்கக் கூடும்? சத்தியம் மேலோங்கி ஆதிக்கம் அடையுமானால், மரித்தோருக்காக ஜெபங்களும் பூஜை பலிகளும் நடத்தப்படுமா? வேத புத்தகம் சொல்லுகிறபடி, மரித்தோர் ஒன்றும் அறியார்களானால், ஆவிமார்க்கத்தாரும் மற்றவர்களும், மரித்துப்போன தங்கள் சிநேகிதரோடு சம்பந்தமும் சம்பாஷணையும் வைத்துக் கொள்ளுகிறார்கள் என்னும் நம்பிக்கைக்கு இடமிராமற் போகும்.

## பிசாசுகள் மரித்தோரைப் போல உருவமெடுத்தல்

எதையும் எளிதில் நம்பக்கூடிய மனிதத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு– மரிக்கிறவர்கள் மரிப்பதாகக் காணப்படுகிறபொழுது அவர்கள் மரணத்தில் முன்னிலும் அதிகமான உயிரை அடைகிறார்களென்ற உத்தேசத்தை (மூட நம்பிக்கையை) – ஆதாரமாகக் கொண்டு, பிசாசுகள் தங்களுடைய வஞ்சகச் செயல்களைப் பெருகப்பண்ணி, மனுஷரைத் தங்களுக்கு அடிமைப்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றன. மனுஷரால் பார்க்கப்படக் கூடாதவர்களா யிருந்தாலும் மனுஷருடைய காரியாதிகள் அனைத்தையும் அறிந்துகொள்ளக் கூடியவர்களாய் இருப்பதால், அவர்கள் மரித்துப் போனவர்களின் உருவத்தை – வடிவத்தை – எளிதல் எடுத்துக்கொள்ளக்கூடும். பகல் வெளிச்சத்தில் மாம்ச தேகங் களை எடுத்துக் கொள்ளும் சக்தியை ஜலப்பிரளய காலம் முதல் நீக்கப்பெற்ற (இழந்துவிட்ட) கெட்டுப்போன தூதர்கள் மனுஷரோடு சம்பந்தம் வைத்துச் சம்பாஷிக்கவும் தங்களுடைய கிரியைகளை நடப்பிக்கவும், தங்களுடைய ஏவலாட்களாக இருக்கும் படி, தங்களால் வஞ்சிக்கப்படக்கூடிய மனுஷரைக் கருவிகளாக (Mediums) உபயோகப்படுத்துகிறார்கள். இந்த மனுஷரில் அநேகர் நற்குணமுடையவர்களும் மற்றும் அநேகர் அதற்கு எதிரிடையனாவர்களுமாய் இருக்கிறார்கள். ஆனால் துன்மார்க்கரோ, பேதைகளோ, நல்லவர்களோ யாராயிருந் தாலும் சரியே, அந்தப் பிசாசுகள் அடக்கி ஆளக்கூடியவர்களை அவைகள் உபயோகிக்கின்றன. தங்களால் ஏமாற்றப்பட்டவர் களுடைய பேதமையை ஆதாரமாகக் கொண்டு கிரியை நடப்பித்து, உயிரோடிருக்கிறவர்களோடு சம்பாஷிக்க (தொடர்பு வைத்துக்கொள்ள) அதிக அவசரங்கொள்ளுகிறார்கள் என உத்தேசிக்கப்படுகிற மரித்தோரைப் பற்றி விவரித்துச் சொல்ல அவர்களுடைய உதடுகளையோ, அல்லது கையிலுள்ள பென்சிலையோ, பிசாசுகள் உபயோகிக்கின்றன. மேலும் மரித்துப்போன ஆளைப்பற்றிய வர்ணனையானது, பிசாசுகளால் ஏமாற்றப்பட்டவனாகிய ஆள் (அவைகளுடைய கருவி அல்லது ஏஜெண்டு – Medium) அந்த மரித்துப் போனவனுடைய அந்திய காலத்து நடபடிகளை (வயது, இனம், உடுப்பு முதலியவைகளைப் பற்றி) அறிந்த அறிவுக்குச் சரியாய் சாதாரணமாகப் பொருந்துகிறது. இரண்டு அல்லது பத்து வயதில் மரித்த பிள்ளைகள், மரித்தபின் பத்து வருஷங்கள் உயிரோடிருக்குமானால், அவர்கள் பன்னிரண்டு அல்லது இருபது வயதுடையவர்களாகித் தகுந்தபடி பெரியவர்களாகி இருக்க வேண்டுமென்பதையும், அவர்கள் உயிரோடிருக்கையில் அவர்களைப் பார்த்த பொழுது அவர்கள் உடுத்தியிருந்த அதே வஸ்திரங்களையே ஆவி வாசம் பண்ணும் லோகத்தில் உடுத்திக் கொண்டிருக்க அவர்கள் உண்மையாகவே விரும்ப மாட்டார்கள் என்பதையும் அறிந்து கொள்ளத் தவறிப் போகிறார்கள். ஏமாற்றப்பட்டவனுக்கும் (பிசாசுகளின் கையாள் – Medium) மரித்துப்போனவனுக்கும் மாத்திரம் தெரிந்த விஷயங்களை வெளியிட பிசாசுகளுக்கிருக்கும் சக்தியானது, விஷயங்களை உண்மையென்று நிரூபிக்கிறது.

## பிசாசுகள் தரிசனங்களை உபயோகித்தல்

தங்களையும் தங்கள் கிரியைகளையும் ஏற்றுக் கொள்ளும் தம்மையுள்ள ஜனங்களை வசப்படுத்தவும் தங்கள்மேல் மனப்பற்றுக் கொள்ளவும் பிசாசுகள் அடிக்கடி தரிசனங்களை வழங்குகின்றன. நாம் கவனிக்க வேண்டியதும் நலமானதுமான “அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் நமக்கு உண்டு” (2 பேது. 1 : 19) என்பதை மறந்து, நல்லெண்ணங் கொண்ட அநேக ஜனங்கள் பிசாசுகள் அளிக்கும் தரிசனங்களில் அதிகமாய் உரங்கொண்டு, அத்தரிசனங்கள் பரலோகத்திலிருந்து தங்களுக்கு நேரே கிடைக்கிற தேவ வெளிப்படுத்துதல்களென்று உறுதியாய் நம்புகிறார்கள். வேத வாக்கியங்கள் கொடுக்கப்பட்டு வேத புத்தகம் பூரணமடையுமுன்னே தமது ஜனங்களுடைய போதனைக்காக உறுதியானதும் தவறாததுமான சில தரிசனங்களைத் தேவன் அளித்தது மெய்யே; ஆனால் இப்பொழுதோ, தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேத வாக்கியங்களின் மூலமாய் தேவனுடைய மனுஷன் (பூரண முள்ளவனாகவும்) தேறினவனாகவும் **எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாயுமிருக்கிறான்.** (2 தீமோ. 3 : 16, 17); ஆகையால் அவனுக்குக் கூடுதலான வேறு தரிசனங்கள் தேவை இல்லை.

ஆனால் பேதமையையும் மூட நம்பிக்கையையும் ஆதாரமாகக் கொண்டு கிரியை நடப்பிக்கிற பிசாசுகள் அநேக தரிசனங்களை அளிக்கின்றன; வழக்கமாய் “நீங்கள் சாகவே சாவதில்லை” என்று சாத்தான் சொன்ன பொய்க்கு அனுகூலமாகவே தரிசனங்களை அளிக்கின்றன. இவ்விதமாக அவைகள் கன்னிமரியாளைப் போலவோ, ஒரு பரிசுத்தவானைப் போலவோ, மரித்துப்போன கணவன் அல்லது மனைவியைப் போலவோ, சிநேகிதனைப் போலவோ, இனத்தானைப் போலவோ தோன்றலாம். தங்களால் வசப்படுத்திக் கொள்ளப் பட்டவர்களுடைய (பிசாசுகளின் கையாட்களுடைய) அன்பர் களைப் பற்றியும் பரலோக மகிமை முதலியவைகளைப் பற்றியும் நேர்த்தியான தரிசனங்களை அளித்து பிசாசுகள் அவர்களுடைய மனதை உறுதியடையச் செய்கின்றன. மரணப் படுக்கை யிலிருக்கிற பெலவீனமான மனதுள்ளவர்களையுங்கூட இந்தப் பொய்ப் பிரசாரத்துக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பிசாசுகள் தரிசனங்களை அளிக்கின்றன; இவ்விதமாக, மரிக்கிறவர்கள் வாஸ்தவத்தில் (உண்மையில்) மரிக்கிறவதில்லை என்றும், அவர்கள் பரலோக இன்ப வாழ்விலோ அல்லது நித்திய வேதனையிலோ தொடர்ந்து உயிரோடிருக் கிறார்களென்றும் மற்றவர்கள் மனதில் பதிய வைக்க பிசாசுகள் மரணப்படுக்கையிலிருக்கிறவர்கள் மூலமாக முயலுகின்றன.

மரித்தோர் மரிக்கவில்லை என்று போதிக்கிற எல்லாக் கிறிஸ்தவ வகுப்பாரின் போதனைகளெல்லாம் பிசாசின் வஞ்சகத்தை ஆதரிக்கின்றன. இருண்ட யுகங்களில் ஏற்பட்ட கொள்கைகளினால் வஞ்சிக்கப்பட்டிருக்கும் கண்ணியமுள்ள குருவானவர், மரித்துப் போனவன் இப்பொழுது அவர்களுக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டிருக்கிறானென்றும், அவன் பேசுவானானால் அவர்களைப் பார்த்து, “எனக்காக அழா தேயுங்கள்” என்று அவன் சொல்லக் கூடுமென்றும், மரித்தோரை அடக்கம் பண்ணும் சமயத்தில் தமது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஜனங்களைப் பார்த்துச் சொல்லுகிறார்.

பிசாசுகளின் கையாட்களும் (medium) சூட்சம் தரிசிகளும், தாங்கள் ஆவிகளின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறவர்கள் என்றும் அவர்கள் மூலமாக மரித்தவன் பேசக் கூடுமென்றும் தெரிவிக்கிறார்கள். வஞ்சகமானது அநேகரிடம் வெகு பெலமாய்க் கிரியை செய்து வருகிறதென்பது ஆச்சரியப்படத்தக்கதா? பிசாசுகளின் உபதேசங்களுக்கெல்லாம் பரிகாரம் தேவ வசனம் கூறும் செய்தியேயாகும். அவையாவன:- (1) மரித்தோர் உண்மையில் மரித்தோரே. (2) கிறிஸ்து நமது நிமித்தம் மரித்தார். (3) அவருடைய இரண்டாம் வருகையில் அவர் இராஜ்யபாரம் நடத்தும் காலத்தில் நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிரோடெழுந்திருப்பது உண்டு (அப். 24 : 15) என்பவைகளே.

அதரிசனமான பொல்லாத ஆவிகள் உண்டு என்பதை மறுக்கிறவர்கள் - ஆட்சேபிக்கிறவர்கள் - சகல விதமான வியாதிகள் மேலும், அசுத்த ஆவிகள் மேலும் இயேசுவானவர் தமது சீஷர்களுக்கு அதிகாரங்கொடுத்தபொழுது, அவர் என்ன கருத்தில் பேசினாரென்று தெரிவிப்பார்களாக. அவருடைய எழுபது சீஷர்கள் சந்தோஷத்தோடு திரும்பிவந்து, "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்று சொன்னபொழுது (லூக். 10 : 17) அவர்கள் என்ன கருத்தில் பேசினார்கள் என்பதை அவர்களே விவரித்துச் சொல்லுவார்களாக. இந்தப் பொல்லாத ஆவிகளில் ஒரு லேகியோனை ஒரு மனுஷனிலிருந்து இயேசு துரத்தினாரென்று வேத வாக்கியங்கள் சொல்லுகிறதையும், கெதரேனருடைய நாட்டில் உள்ளபடி சம்பவித்ததையும் அவர்களே விவரித்துச் சொல்லுவார்களாக. பன்றிக் கூட்டத்திற்குள் போகும்படியாக அனுமதித்தபொழுது, அந்த லேகியோன், அக்கூட்டம் முழுவதையும் மதிமயக்குவதற்குப் போதுமான தொகையாயிருந்தது. (லூக். 8 : 26-33).

குறி சொல்லும் சக்தியை உடையவளாயிருந்த பெண்ணைக் கடிந்து பேசி அவளில் இருந்த பொல்லாத ஆவியை அவளைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டபொழுது பரிசுத்த பவுல் ஆவிகளைப் பற்றி எவ்விதமான கருத்து உடையவராய் இருந்தாரென்பதையும் அவர்களே விவரித்துச் சொல்லுவார்களாக (அப். 16 : 16-18). பொல்லாத ஆவி அவளைவிட்டு வெளியேறினதும் குறி சொல்லும் அவளுடைய தொழிலுக்கு ஏன் முடிவு வந்ததென்று அவர்களே விஸ்தரித்துச் சொல்லட்டும். எந்தச் சமயத்திலாவது, எந்தக் கருத்திலாவது, இந்தப் பொல்லாத ஆவிகள் எப்பொழுதாவது மனுஷர்களாய் இருந்தார்களென்பதற்கு வேத புத்தகத்திலெங்கும் ஓர் அத்தாட்சியாவது கிடைக்கவே கிடையாது என்பதையும் நாம் அறிந்து கொள்வோமாக. இந்தப் பொல்லாத ஆவிகள் மனுஷ குமாரத்திகளை விவாகஞ் செய்துகொண்ட பின்பே, ஜலப்பிரளய காலத்தில் தேவனுடைய நடபடிகளுக்குள் சம்பந்தப்பட்டார்கள் என்பதையும் நாமெல்லாரும் அறிந்து கொள்வோமாக.

ஜலப்பிரளயம் முடிந்ததும், இந்தப் பிசாசுகள் மனுக்குலத்துக்குத் தீமை செய்யவும், சத்தியத்தை எதிர்க்கவும், மரித்தோர் மரிக்கவில்லை என்ற பொய்யை மனுக்குலமானது நம்பும்படி செய்ய முயலவும் ஆரம்பித்தன. இவ்விதமாய் மனுமக்களை வஞ்சிப்பதில் எந்த அளவில் வெற்றியடைந்தார்களோ அந்த அளவுக்கு அவர்கள் தங்களால் வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருக்கும்படி மனுக்குலத்தை அடிமைப்படுத்திக் கொண்டன. அவைகளின் பேராசையின் இலக்கு, அவர்களைத் தங்கள் வசப்படுத்தித் தங்களுடைய முழு ஆட்சிக்குள் வைத்துக்கொள்வதேயாகும்; மற்றவையெல்லாம் அவைகளுக்கு உதவக் கூடியவைகளாய் இருக்கின்றன. இப்படி பிசாசுகளினால் வஞ்சிக்கப்பட்டு அவைகளுடைய கையாட்களாகிய மனுஷரில் அநேகர் (mediums) தங்கள் மூலமாய் சம்பாஷிக்கிற (கிரியை செய்கிற) ஆவிகளின் பிசாசுக் குணத்தை அறிந்து, அவைகளுக்குப் பயந்து, அவைகளுடைய செய்கைக்குத் தங்களுடைய மனதை முற்றிலும் ஒப்புக் கொடுப்பதினாலுண்டாகும் அபாயத்தையும், அதின் பலன் மெய்யாகவே அவர்களைப் பிசாசுபிடித்தவர்களாக ஆக்குமென்பதையும் அறிந்து, அவைகளுக்கு விரோதமாய் அவர்கள் ஒருவரையொருவர் கடிந்துகொள்ளுகிறார்கள். தற்காலத்தில் இப்படி பிசாசு பிடித்திருப்பது பைத்தியம் என்று சாதாரணமாய் சொல்லப்படுகிறது; என்றாலும் அநேக வைத்தியர்கள் பிசாசு பிடித்திருப்பதற்கும் பைத்தியம் பிடித்திருப்பதற்குமுரிய வித்தியாசத்தை உற்றறிந்து, பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளிலுள்ள பைத்தியக்காரர் என்னப்படுகிறவர்களுள் பாதிப்பேர்கூட பைத்தியத்தை உண்டாக்கக்கூடிய தேகக்கோளாறுகளை உடையவர்களாக இருக்கவில்லை என்று தாராளமாய்ச் சொல்லுகிறார்கள். பெரும்பாலானோர் பிசாசுபிடித்தவர்களாய் இருக்கிறார்கள்.

## எண்ணமெழுப்புதல் – மனம்மாறச் செய்தல் – மனதிற்பதியச் செய்தல் – தொந்தரவு பண்ணி ஆட்சி கொள்ளுதல் (முற்றுகை போடுதல்) – தனக்குரியதாக்கிக் கொள்ளுதல்

கர்த்தருடைய பராமரிப்புக்கும் நடத்துதலுக்கும் தங்களைக் கீழ்ப்படுத்தாதவர்கள் பிசாசுகளினால் நடத்தப்பட்டு, இந்த ஐந்து நடபடிக்கைகளினால் அபாயத்திற்குள்ளாகிப் போகிறார்கள். "எதிராளியின் தந்திரங்களுக்கு" தப்பிப் பிழைக்க வேண்டுமானால், இந்த ஒவ்வொரு நடபடிக்கையோடும் தேவனுடைய ஜனங்கள் உறுதியான மனதோடு போராட வேண்டும். வெறுமையாய் இருக்கிற அதாவது ஏதாவது நல்லெண்ணத்தை உபயோகியாது இருக்கிற மனமானது பிசாசுகள் **எண்ணங்களை ஏற்படுத்துவதற்கு** அதிகமான வசதி அளிக்கிறது. (மத். 12 : 43-45). மனதார நல்நோக்கமும் ஊக்கமும் ஜாக்கிரதையும் கொண்டவர்கள் தங்களுடைய முயற்சியினால் சரியான பாதுகாப்பை உடையவர்களாய் இருப்பார்கள். ஆனால் பிசாசுகளுக்குரிய வீண் எண்ணங்களுக்கும் மனோபாவனைகளுக்கும் இடங்கொடுத்து அவைகள் மனதில் ஏற்றுக் கொள்ளப்படுமேயாயின், இரண்டாவது படியாகிய **மனம் மாறச்** செய்யும் செய்கை ஒருவனில் விரைவில் தொடரலாம். வேத ஆராய்ச்சி, ஜெபம் முதலியவைகளினின்றும் வேறெல்லா நற்கிரியை, நல்லெண்ணங்களில் இருந்தும் மனமானது கேவலமான நிலைமைக்குத் திருப்பிவிடப்படும். வீண் எண்ணத்திற்குரிய சக்தியானது சரியான எண்ணத்தையும் பகுத்தறிவையும் நியாயதோரணையையும் அகற்றத்தக்க அளவில் பெலமுள்ளதாகிறது. இது பிசாசுகளின் மூன்றாவது படியாகிய "**மனதில்படத்தக்கதாகப் பதியச் செய்தல்**" என்ற செய்கைக்கு வழிநடத்துகிறது. மற்ற அநேகரைப் பார்க்கிலும் சிலர் இயல்பான பிரகாரமே வீண் எண்ணங்கள் மிக அதிகமாய்ப் பதிக்கப்படக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் இவைகளைப் பொல்லாத ஆவிகளிடமிருந்து வெகு இலேசாய் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் இருந்தாலும், அவை உண்டாகி வருகிற மூல ஆதாரத்தை அறியக் கூடாதவர்களாய் இருக்கிறார்கள்; என்றாலும் அவை தங்கள் சொந்தச் சக்தியினால் உண்டானது என்று எண்ணிப் பிரமிப்படைகிறார்கள். ஆனால் அதரிசனமாயிருந்து கிரியை செய்யும் சத்துவத்தின் கீழ் அவர்களை அதிகமதிகமாய் நெருங்கிவரச் செய்து, வீண் எண்ணங்களை அவர்களில் பதியச் செய்வது புறம்பேயிருந்து உண்டாகிற சக்தியேயென்பது உண்மையேயாகும். அதின் பின்பு நான்காவது படியாகிய "**முற்றுகை போடுதல்**" - ஆட்சி கொள்ள முயற்சிக்குதல் - என்னும் செய்கையை பிசாசுகள் ஆரம்பிக்கின்றன. இதில் சிக்குகிற ஆள் தன்னையும் தன் மன விருப்பத்தையும் தன்னிடத்தில் கிரியை செய்யும் பிசாசுகள்

அரைகுறையான ஆட்சிகொள்ளும்படி இடங்கொடுத்து விடுகிறான். கடைசியாக, ஐந்தாவது படியாகிய **"தனக்குரியவனாக ஆக்கிக்கொள்ளுதல்"** என்ற செய்கையை ஆரம்பித்து, இப்பொழுது பொல்லாத ஆவியானது அவனுடைய மனச்சித்தத்தின்மேல் முழு ஆட்சியையும் அதிகாரத்தையும் அடைந்து, மனுஷீக சித்தத்தை முற்றிலுமில்லாமல் ஆக்கி விடுகிறது.

அதிகமாகவோ குறைவாகவோ போராட்டமில்லாமல் இது எப்பொழுதும் செய்து முடிக்கப்படுகிறதில்லை; ஆகவே சிலவேளைகளில் இதைச் செய்து முடிக்கப் பல வருஷங்கள் பிடிக்கும். இந்தப் போராட்டத்தில் சில வேளைகளில் ஐம்புலன்களுக்குப் புலப்படாமல் விஷயங்களை அறியக்கூடிய சக்தியாலும், சில வேளைகளில் அவைகள் உபயோகிக்கிற ஆட்கள் மூலமாகவும் தங்களால் ஏமாற்றப்படுகிறவனுடைய நம்பிக்கையை அடைய இந்த ஆவிகள் நாடுகின்றன. அவனுடைய மனவாஞ்சை பொல்லாப்புக்குச் சாய்வதாக இருக்குமானால், பிசாசின் நடத்துதல்களும் அவ்வழியைப் பற்றினதாய் இருக்கும்; அவன் தேவ பக்திக்கடுத்த விஷயங்களில் சார்பாயிருப்பானானால், ஜெபம் பண்ணவோ அல்லது வேத புத்தகம் வாசிக்கவோ, அவனுக்கு ஆலோசனை கிடைக்கும்; ஆனால் பின்பு கடிந்துகொள்ளப்படுவான்; பொல்லாத ஆவிகள் சிலவேளைகளில் தங்களுடைய பேச்சில் சர்வவல்லவரைப்போல் நடந்து, அந்த சர்வ வல்லவருக்கேயன்றி தன்னை வேறெவருக்கும் ஒப்புக்கொடுக்கக் கூடாதென்ற சம்பிரதாயமான பேச்சினால், அவனுடைய மனதை தங்களுடைய முழு ஆதீனத்துக்குள்ளாக்கிக்கொள்ள வேண்டுமென்பதே, எப்பொழுதும் இந்த ஆவிகளின் நோக்கமாய் இருக்கிறது.

## சூனியக்காரிகள் – சூனியக்காரர்கள் – செத்துப்போனவர்களுடன் சம்பாஷிக்கிறவர்கள்

பண்டைக் காலத்திலிருந்து பாரம்பரையாய் நமக்குக் கிடைத்துள்ள கதைகளை (சங்கதிகளைத்) தற்காலத்தில் அநேகர் நகைத்துப் புறக்கணிக்கிறார்கள். சூனியக்காரிகளாய் இருந்ததினிமித்தம் சட்டப்படி கொல்லப்பட்டவர்களில் சிலர் யோக்கியமான ஜனங்களாயிருந்தார்கள்; ஆனால் அவர்களுடைய அயலகத்தார் அவர்களை நன்கு புரிந்துகொள்ளாதவர்களாய் இருந்தார்கள். என்றாலும், சூனியக்காரிகள், சூனியக்காரர்கள், மரித்துப்போனவர்களோடு சம்பாஷணை செய்கிறவர்களென்னப்பட்டவர்கள் முதலியோரைப் பற்றிய சங்கதிகள் இயல்பான கட்டுக் **கதைகளல்ல** என்னும் யதார்த்தமான விஷயத்தை இது மாற்றிப்போடவில்லை. அவர்களைப் பற்றிய விஷயங்கள் உண்மையாய் நடந்தவைகள் என வேத புத்தகம் நமக்குத் தெரிவிக்கிறதுமன்றி, அவர்கள் மூலமாய் பிசாசுகளின் வல்லமையானது கிரியை நடப்பிக்கிறதென்றும் நமக்கு விவரித்துச் சொல்லுகிறது. பழைய காலங்களில் சூனியக்காரனோ, சூனியக்காரியோ, மரித்துப் போனவர்களுடன் சம்பாஷணை பண்ணுகிறவனாகக் கூறிக்கொள்ளுகிறவனோ இஸ்ரவேலரின் தேசத்தில் குடியிருக்கக் கூடாதென்றும், தங்களுடைய பில்லி சூனிய வித்தைகளை (பேய் வித்தைகளை) அப்பியாசிக்கக் கூடாதென்றும் தேவன் கட்டளை கொடுத்தார். (உபா. 18 : 9-14). உயிரோடிருக்கிறவர்கள் (ஞானம், அறிவு, வழிநடத்துதல் ஆகியவைகளுக்காக) ஜீவனுள்ள தேவனிடத்தில் விசாரிக்காமல், குறிசொல்லுகிறவர்களிடத்திலும், முணுமுணுக்கிறவர்களிடத்திலும், செத்துப்போனவர்களோடு சம்பாஷிப்பதாகக் கூறிக்கொள்ளுகிறவர்களிடத்திலும் ஏன் விசாரிக்க வேண்டுமென்று தீர்க்கதரிசி மூலமாய் தேவன் ஜனங்களைக் கேட்கிறார். "ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?" (ஏசா.8 : 19, 20).

எந்தோரிலிருந்த அஞ்சனக்காரியின் சங்கதியின் விவரத்தையும், சவுல் கர்த்தருடைய வார்த்தையை விசாரித்தறியக் கூடாமற் போனபொழுது, மரித்துப்போன சாமுவேல் தீர்க்கதரிசியிடம் விசாரித்தறிய அவன் எப்படி முயற்சி செய்தானென்பதையும் நாம் அறிவோம். சவுல் ஒன்றையும் காணவுமில்லை, கேட்கவுமில்லை. சால்வையைப் போர்த்துக் கொண்டிருக்கிற முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகிறானென்று அஞ்சனக்காரி சொன்னாள்; அதினாலே சவுல், அவன் சாமுவேல் என்று எண்ணினான். அஞ்சனக்காரி கண்ட தரிசனங்களும் கேட்ட வார்த்தைகளும் மரித்துப்போன தீர்க்கதரிசியிடமிருந்து கிடைத்தவைகளென அவள் எவ்வளவு தான் உத்தேசங்கொண்டவளாயிருந்தாலும், அவள் பிசாசுகளால் நடத்தப்பட்டாள். அவளுடைய தீர்க்கதரிசனங்களெல்லாம் பொல்லாத ஆவிகளாகிய பிசாசுகளிடமிருந்தே உண்டாயின. (1 சாமு. 28 : 7-19; 1 நாளா. 10 : 13, 14). அப்படியே உண்மையான தேவனை வணங்காத ஜனங்களையுடைய எல்லா தேசங்களிலும் பிசாசுகள் ஜனங்களோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றன.

## கீர்த்தி பெற்ற தலைவர்கள் கண்ணியில் சிக்கிக்கொள்ளுதல்

மரித்துப் போன சாமுவேல் தன்னுடன் பேசினதாகச் சவுல் நம்பும்படி, எந்தோரிலுள்ள அஞ்சனக்காரி மூலமாய் பிசாசுகள் அவனை ஏமாற்றி வஞ்சித்தது போல, இக்காலத்திலும் மற்றவர்களை ஏமாற்றவும் வஞ்சிக்கவும் அவைகள் மிகத் தந்திரமாய் முயற்சி செய்கின்றன. கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள குருக்களும் பெயர் பெற்ற மற்ற தலைவர்களும் மரித்துப் போனவர்களிடமிருந்து செய்திகள் பெற்றுக்கொள்ளுகிறார்கள் என நம்பத்தக்கதாக, அவர்களும் மற்றவர்களும் இந்த வஞ்சிக்கிற ஆவிகளின் கபடமான முயற்சிகளினால் முற்காலங்களிலும் தற்காலத்திலும் தப்பு வழியில் நடத்தப்பட்டு வருகிறார்களென்பதை நிரூபிக்க மிகுதியான உதாரணங்களை எடுத்துக்காட்டக் கூடியதாய் இருப்பது, துக்கத்தையும் கலக்கத்தையும் கொடுக்கக்கூடியதே; இவ்விதமாக, இருண்ட யுகங்களிலுண்டான உபதேசங்களில் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டு, அவைகளை ஜனங்களுக்குள் பரவச் செய்வதற்கும் ஆதரவளிக்கிறார்கள்; மேலும் "மரித்தோர் ஒன்றும் அறியார்கள்" என்று வேத புத்தகம் போதிக்கிற தெளிவான உபதேசத்துக்கு (பிர. 9 : 5, 10; யோபு 14 : 21; சங். 6 : 5; 115 : 17; 146 : 4; ஏசா. 38 : 18, 19; 63 : 16) நேர் விரோதமாய் மரித்துப்போனவர்கள் உயிரோடிருக்கிறார்களென்றும், அவர்கள் உயிரோடிருக்கிறவர்களோடு சம்பாஷிக்கக் கூடுமென்றும் – ஆவி மார்க்கம் போதிக்கிற உபதேசங்களைக் கொண்டு ஜனங்களை அதிகமதிகமாய் ஆவி மார்க்கத்துக்குத் திருப்ப, குருக்களும் மற்றவர்களும் பிசாசுகளுக்கு மிக அனுகூலமாய் உபயோகிக்கப்படுகிறார்கள்.

## நார்மன் வி. பில் வேத சாஸ்திரி தமது நம்பிக்கைகளை வெளியிடுகிறார்

கிறிஸ்தவ மண்டலத்தில் தோன்றின பிரசித்தி பெற்ற தலைவர்களுள், ஒரு பிரபல வானொலிப் பிரசங்கியும், ஏராளமாய் விற்பனையான பற்பல புஸ்தகங்களுக்கும், மிகுதியான பத்திரிக்கைக் கட்டுரைகளுக்கும் ஆக்கியோனுமான பீல் வேதசாஸ்திரியாரை நாம் எழுதுகிற விஷயங்களுக்கு ஒரு சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளுகிறோம். **"மரணம் என்பது இல்லை"** என்ற தலைப்பெயருடன், The Readers' Digest என்ற **பத்திரிக்கையில்** மறுமையைப் பற்றியுள்ள (மரணத்துக்குப் பின் மனிதனின் வருங்காலத்தைப் பற்றியுள்ள) அவருடைய நம்பிக்கைகள் விவரமாய் காண்பிக்கப்பட்டிருக்

கின்றன – மரணம் என்பது இல்லை என்று இக்கட்டுரைக்கு அவர் கொடுத்திருக்கிற தலைப்பெயரே, அவர், "நீங்கள் சாகவே சாவதில்லை" என்ற சாத்தானுடைய பொய்யை, ஆராய்ந்து பாராமல் முழுவதுமாய் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது. (ஆதி. 3 : 4; யோவா. 8 : 3, 44). பின்வரும் அவருடைய சொந்த வார்த்தைகளையும் அடைப் புக்குறிகளுக்குள் (Bracket) நாம் கூடுதலாய் சேர்த்து எழுதி யிருக்கிற வியாக்கியானத்தையும் வாசித்துப் படிப்போமாக :–

"இவ்வுலகத்திற்குரிய மூலநியமம், மரணம் அல்ல, ஜீவனே என்ற உறுதியான கொள்கையை ஆதரிக்கிற ஏராளமான சம்பவங்களை அநேக வருஷங்களாக நான் எழுதிவைத்து வந்திருக்கிறேன். [விழுந்துபோன மனுக்குலத்துக்கு ஜீவன் மூலநியமமாக வேத புத்தகம் ஒருக்காலும் சொல்லுகிறதில்லை; ஏனெனில் மரணமானது ஆதாமின் பாவத்தினால் அவர்கள் மேல் வந்தது; ஜீவனோ, ஆதாமை மீட்கும் பொருளாக – அவனுடைய பிரதிக்கிரையமாக – மரித்த இயேசுவின் இரத்தத்தின் புண்ணியத்தின் மூலமாக மாத்திரம் வரக்கூடும். (1 தீமோ. 2 : 5, 6) – ஏனெனில் நமக்கோ ஜீவன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டான தேவனுடைய ஈவாயிருக்கிறது – ரோம. 5 : 12–21; 6 : 23]. அவைகளிலிருந்து (தேவனுடைய வசனத்திலிருந்து அல்ல) **மரணம் என்பதொன்று இல்லை** என்ற – இம்மையும் மறுமையும் ஒரேமாதிரியானவையே என்ற (சாத்தானுடைய பொய்யில்) அசைக்கமுடியாத நம்பிக்கையை அடைந்திருக்கிறேன். [தேவனுடைய வசனத்துக்கு எதிரிடையாக] நான் இந்த முடிவுக்கு வந்து சேர்ந்தபொழுது, எனது முழு ஜீவியத்திற்குமுரிய மிகுந்த திருப்திகரமானதும் அறிவுறுத்துகிறது மான தத்துவ ஞானமாய் – வேதாந்தமாய் – இருப்பதாக நான் அதைக் கண்டு பிடித்தேன். [அறிந்தேன் – "**லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும்,** ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடி எச்சரிக்கையாய் இருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழியாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" (கொலோ. 2 : 8)].

"மானிட ஆவிகள் மரணத்தின் இரு பக்கங்களிலும் – மரணத்துக்கு முன்பும் பின்பும் – இடையில் அற்றுப்போகாமல் தொடர்ச்சியாய் சேர்ந்தே உயிரோடிருக்கின்றன என்பதைப் பின்வரும் அனுபவங்களினால் நான் தெளிவாய் அறிந்துகொண்டேன் [ஆகவே, பீல் வேதசாஸ்திரியார் சொல்லுகிறபடி கவனித்தால், உயிர்த்தெழுதலின் நாள் உண்டு என்று சொல்லுவதற்கில்லை; மேலும் "மரித்தோர் உயிர்த்தெழா விட்டால், **கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும்** கெட்டிருப்பார்களே – அழிந்து போவார்களே" என்று வேத புத்தகம் சொல்லுவதும் (1 கொரி. 15 : 16–18) முற்றிலும் பொய்யாய்ப் போகும்.]

"Mrs. ப்ரிசன்கால்ட் என் சபையைச் சேர்ந்தவள் அவள் என்னிடம் சொன்னதாவது; – "எனது சிறியதாயாருடைய கணவனும் மூன்று பிள்ளைகளும் அவர்களுடைய வீடு தீப்பிடித்து எரிந்து அழிந்து போனபொழுது உயிரோடே எரிந்து மரித்துப்போனார்கள். எனது சிறிய தாயாரோ தீயிலகப்பட்டு ஆபத்தான நிலைமையிலிருந்தாலும் பின்னும் மூன்று வருஷங்களாக உயிரோடிருந்தாள். கடைசியாக, அவள் சாகுந்தருவாயிலிருக்கையில், திடீரென்று அவளுடைய முகத்தின் மேல் ஒரு பிரகாசம் காணப்பட்டது. அப்பொழுது அவள், 'அது மிகவும் அழகான சாட்சி; அவர்கள் என்னை எதிர்கொண்டழைக்க வருகிறார்கள்; என் தலையணைகளை உயர்த்திச் சரியாக வையுங்கள்; நான் நித்திரை அடையட்டும்" என்று சொன்னாள் என்பதே.

"வில்லியம் சேஜும் அவருடைய மனைவியும் எனது நண்பர்கள். அவர்கள் நியுஜெர்சியில் குடியிருந்தார்கள். நான் அவர்களுடைய வீட்டில் அடிக்கடி தங்கியிருக்கிறேன். வில்லியம் சேஜ் முதலில் மரணமடைந்தார். சில வருஷங்களுக்குப் பின்பு, அவருடைய மனைவி மரணப்படுக்கையில் இருக்கையில், பிரமிப்படையச் செய்யும் ஒரு காட்சி அவளுடைய முகத்துக்கு நேரே நிகழ்ந்தது. அவள் சந்தோஷ முகத்தோடு, "ஏன், அது என் கணவன் வில்லியம்தான்" என்றாள். அவள் கண்டது தன் கணவனையே என்பதை அவளுடைய படுக்கையைச் சுற்றி நின்றவர்கள் சற்றாகிலும் சந்தேகங்கொள்ளவேயில்லை."

பீல் வேத சாஸ்திரியாருடைய விசுவாசம் (?) எவ்வளவு கீழ்த்தரமானதும் அற்பமானதும் சாரமற்றதுமான திருஷ்டாந்தத் தின்மேல் கட்டப்பட்டிருக்கிறது! இந்தப் பொல்லாத ஆவிகளாகிய பிசாசுகள் தங்களுடைய எஜமானுடைய ஆதிப் பொய்யை மனிதர்களுக்குள் பரவச் செய்வதில், ஜீவன் போகிற நிலைமை யிலுள்ள ஜனங்களின் மனசுகளைச் சில சமயங்களில் தங்களுடைய வேலைக்கு அனுகூலப்படுத்திக் கொண்டு, அவர்கள் பெலவீனப்பட்டுள்ள நிலைமையில் அவர்களுக்கு முன்பாக மானதக் காட்சிகளை – தோற்றங்களைக் காண்பிக் கிறதுமன்றி தரிசனங்களையும் அளிக்கின்றன என்பதை இந்த வேத சாஸ்திரியார் அறியாரோ? இவ்வாறு இலகுவாய் ஏமாற்றப்படுகிறவர்களுள், பீல் வேத வாஸ்திரியைப் போன்ற தலைவர்கள், பழைய காலத்திலுள்ள சவுல் இராஜாவைப் பார்க்கிலும் மிக அதிகமான குற்றத்துக்கு ஆளாவார்கள்; ஏனெனில் சவுலைப் பார்க்கிலும் அவர்கள் மிக அதிகமான வெளிச்சத்தையும் அறிவையும் அடைந்தவர்கள்.

## பீல் வேத சாஸ்திரி மரித்தோரோடு கொண்டுள்ள சம்பந்தங்கள் போலியானவையே

முந்தின காலத்திலுள்ள சவுல் இராஜாவைப் போலவே, உண்மையில் பிசாசுகளாய் இருக்கிறவர்களிடமிருந்தே பீல் வேத சாஸ்திரியும் செய்திகளைப் பெற்றிருக்கிறார். தேவனுடைய வசனத்தை நம்புவதற்குப் பதிலாக, அவர் சாத்தானுடைய பொய்யை நம்புகிறபடியால், இந்த வஞ்சிக்கிற ஆவிகளை மரித்துப்போன மனுஷரென்று எண்ணி அவர் ஏமாற்றமடைந்து போனார்.

பீல் வேத சாஸ்திரி தமது தாயாரின் மரணத்தைப் பார்த்தறிந்த பின்பு, அவர் மிகவும் கலக்கமுற்றதாகவும், அவருடைய வீட்டறைக்கு வந்ததும் ஒரு வேத புத்தகத்தின்மேல் தம்முடைய கைகளை வைத்ததாகவும், அப்பொழுது திடீரென அவருடைய தலையின் உச்சியிலும் பின்புறத்திலும் இரண்டு கைகள் வந்து அமர்ந்ததை உணர்ந்ததாகவும், உயிரோடிருக்கிற ஒரு ஆளின் கைகளைப்போல் அவைகள் இளஞ் சூடாகவும் பரிசிக்கக் கூடியவையாகவும் இருந்ததாகவும், அவைகள் சுலபமாய்த் தலைமேல் தங்கியிருந்தாலும் உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருந்ததாகவும், மரித்தோர் மரணத்துக்குப்பின் முன்னி லும் அதிகமாய் உயிரோடிருக்கிறார்கள் என்ற கருத்துடன் பீல் வேத சாஸ்திரியார் எழுதிய ஒரு புஸ்தகத்திலும், ஒரு வாராந்தரப் பத்திரிகையிலும் தெரிவிக்கிறார். இந்த வேத சாஸ்திரியார், தாம் ஒப்புக் கொள்ளுகிற புரோட்டெஸ்டாந்து மதக் கொள்கையின்படி அவருடைய தாயார் வெகு தூரத்துக்கப்பால் பரலோகத்தில் இருப்பதாக உத்தேசிக்கப்படுவதை மறந்துவிட்டார் போலும்! ஆனால் சவுல் சாமுவேலைக் குறித்து ஆராய்ந்து பாராமல் போனதுபோல, பீல் வேத சாஸ்திரியும் சுலபமாய் வஞ்சிக்கப்பட்டு, அவரைத் தொட்டது அவருடைய தாயார் தான் என்ற முடிவுக்கு சடிதியில் வந்துவிட்டார்.

இலையுதிர் காலத்தில் ஒருநாள் பீல் வேத சாஸ்திரியார் தனிமையாய் இருந்ததினால் வருத்தமடைந்து, மறுபடியும் தம்

தாயாரோடு இருப்பதற்கு விருப்பங்கொண்டதாகவும், ஆகவே அவளுடைய பிரேதக் குழியைப் போய்ப் பார்த்ததாகவும் தெரிவிக்கிறார். மேலும் அவர் சொல்லுகிறதாவது, "நான் துக்கத்தோடு தனிமையாக உட்கார்ந்தேன். ஆனால் திடீரென மேகங்கள் கலைந்துபோயின. சூரியன் நன்றாய்ப் பிரகாசித்தது. அப்பொழுது என் தாயாருடைய சத்தத்தைக் கேட்பது போல் தெரிந்தது. அவள் அறிவித்த செய்தி, தெளிவாகவும் திருத்த மாகவும் இருந்தது. அது முந்தின நாட்களில் அவளுக்கிருந்த அருமையான பேச்சுத் தொனியில் சொல்லப்பட்டது. "உயிருள்ளோரை மரித்தோரிடையே நீ ஏன் தேடுகிறாய்? நான் இங்கே இல்லை. நான் உன்னோடும் என் அன்பர்களோடும் எப்பொழுதும் இருக்கிறேன்" என்பதே அவள் கொடுத்த செய்தி. இதைக் கேட்டவுடனே என் மனதில் ஞான ஒளி தோன்றி நான் அதிசயிக்கப்படத்தக்கவிதமாய் சந்தோஷமடைந்தேன். நான் கேட்ட செய்தி உண்மையானதென்று நான் அறிந்து கொண்டேன். [அவர் எப்படி அறிந்து கொண்டார்? "வேதத்தை யும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" – ஏசா. 8 : 19, 20.]

ஆகவே உலகப்புகழ்பெற்ற இந்த வேதசாஸ்திரியார், மரணப்படுக்கையிலுண்டாகும் தரிசனங்களாலும், அசுத்த ஆவிகளால் மனதில் பதிக்கப்படும் செய்திகளாலும், தம்முடன் பேசுகிற குரல்களாலும், தம்மைத் தொடுகிற கைகளாலும் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சாத்தான் சொன்ன பொய்யின் மேல் உறுதியான நம்பிக்கை கொள்ளுகிறாரென நாம் காண்கிறோம்; இதற்கு இசைவாகவே அவர், "நாம் மரணமென்று சொல்லுவது எதுவோ அது சம்பவிக்கிற பொழுது, ஜீவன் அற்றுப் போகாமல் அது தொடருகிறது" என்றும் "மரணமாயிருப்பதாகக் காணப்படுவது, அப்படியிருப்பதாகத் தோன்றுகிறதாய் மாத்திரம் இருக்கிறது" என்றும் நான் உறுதியாய் நம்புகிறேன் என்று விவரித்துச் சொல்லுகிறார். இவ்விதமாக, நாம் கவனித்து நலமடைவதற்குரிய அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தைத் தள்ளிவிட்டு (2 பேது. 1 : 19), இந்த வேத சாஸ்திரியார், "கட்டுக்கதைக்கும் (கதைகளுக்கும்)", "வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுக்கிறார்." (1 தீமோ. 1 : 3; 4 : 1); ஆகையால் அவர், ஆவி மார்க்கத்துக்கு அனுகூலமாக ஜனங்களை வசப்படுத்த உபயோகப் படுத்தப்படுகிறார்.

ஜீவன் அழிக்கப்பட முடியாததென்று புதிய ஏற்பாடு போதிக்கிறதாகவும் பீல் வேத சாஸ்திரி சொல்லுகிறார். யோவா. 3 : 36–லும், 1 யோவா. 5 : 12–லும் சொல்லியிருக்கிற தேவனுடைய வசனத்தை அவர் எதிர்த்து நிற்க முடியுமா? (அவர் எப்படி எதிர்த்துப் பேசக்கூடும்?). இந்த இரு வாக்கியங்களும், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை" என்று நமக்குத் தெரிவிக்கின்றன. தேவன் துன்மார்க்கர் யாவரையும் அழிப்பாரென்று சொல்லுகிற தேவனுடைய வசனத்துக்கு (சங். 145 : 20) இணக்கமாகவே, பேதுரு அப்போஸ்தலனும், அவர்கள் "பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருக ஜீவன்களைப்போல .................. தங்கள் கேட்டிலே கெட்டழிந்து போவார்கள்" என்று நமக்குத் தெரிவிக்கிறார் (2 பேது, 2 : 12). சாத்தான் தானும் முடிவில் அழிக்கப்படுவான் (எபி. 2 : 14). "ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே (இன்னோம் பள்ளத்தாக்கில் – இரண்டாம் மரணத்தில்) அழிக்க வல்லவருக்கே நாம் பயப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம் – மத். 10 : 28 (பீல் வேத சாஸ்திரியார் இதற்கு எதிரிடையானவர்)"; பாவத்திற்குரிய தண்டனை மரணமே; அது நித்திய வேதனை அல்ல என்பதைத் தெளிவாகவும் திட்டமாகவும் அறிய விரும்புகிறவர்கள் Hell of the Bible என்ற சிறு புத்தகத்தை வாசிக்கவும்.

தேவனுடைய ஜனங்களுக்கு நாம் கூறும் புத்திமதியாதெனில், அவர்கள் தேவனுக்கு முழு உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ளவர்களாய் இருந்து, தீர்க்கதரிசிகள், கர்த்தராகிய இயேசு, அப்போஸ்தலர்கள் முதலியவர்கள் மூலமாய் அவரால் நமக்கு அருளப்பட்ட வேத எழுத்துக்களுக்குத் திட்டவட்டமான கவனம் செலுத்த வேண்டுமென்பதே. இவைகளே, எதிராளியின் கபடோபாயங்களை எதிர்க்கவும் தடுக்கவும் விலக்கவுமுள்ள நம்பகமானதும் நிச்சயமானதுமான பாதுகாப்பாகும்.

கர்த்தாவே, தீமையின் சத்துவங்கள் நாளுக்குநாள்
அதிகரித்துக்கொண்டு வருகிறதை நான் அறிகிறேன்;
இடுக்கமான வழியில் நடக்கிறவர்களைக் கண்ணியில்
அகப்படுத்தவும் தடை செய்யவும் அவைகள் முயலுகின்றன;
நான் ஒருக்காலும் அவைகளுக்குச் செவிகொடேன்;
கர்த்தாவே, அவைகளின் வஞ்சகமான சத்தியைக் கண்டு
அஞ்சுகிறேன்; அவைகளின் ஒவ்வொரு கண்ணியினின்றும்
என்னைக் காப்பாற்றும், எனக்கு உதவி செய்யும்,
எப்பொழுதும் என்னைப் பாதுகாத்துக் கொள்ளும்.

***

**நாசரேத் கன்வென்ஷன் 2010**

**அக்டோபர் 30, 31, நவம்பர் 1**

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொண்ட சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. சங். 29 : 11.**

**இந்த ஊழியத்தில் பங்குபெற்ற மற்றும் உதவி செய்த சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் மிகுதியாக ஆசீர்வதிப்பாராக. சங். 11 : 4; 2 கொரி. 9 : 11; 2 சாமு. 22 : 2, 3, 26, 27, 31.**

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent@biblestandardindia.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**